தமிழ் முரசு

1-23

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி : க	ஆசிரியர் : ம. பொ. சிவஞானம்	பகுதி உங

பொருளடக்கம்

திரைக்குப் பின்னால் — தலையங்கம் ... உ

ஆசிரியருக்குக் கடிதம் ... கஉ

அட்டைப்பட விளக்கம் ... கச

ஆசிரியர்கள் அழுத கண்ணீர்! ... கரு

தமிழகத்தைச் சீரழிக்க கம்யூனிஸ்டுகள் உடந்தை! — ம. பொ. சி. ... கஎ

அவனா இவன்? — மு. வரதராசன் ... ஙஉ

வ.உ.சி. பெயரால் ஒன்றுபடுவோம் — ம. பொ. சி. ... ஙரு

அபயம் ஆதரியுங்கள்! ... சங

மதிப்புரை ... சகூ

விலை 4 அணா

1-12-47

திரைக்குப் பின்னால்.....

திருவிதாங்கூர் தனியரசின் மொத்த மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கினர் தமிழர்கள். அவர்கள் அனைவரும் சேர்ந்தார்ப் போல் ஒரே நிலப் பரப்பில் வாழ்கின்றனர். அந்த நிலப்பரப்பும் தமிழ் நாட்டை ஒட்டியே இருக்கிறது. அப்படி இருந்தும் திருவிதாங்கூரில் தமிழர் படும் அல்லல்களை, மலையாள ஆட்சி அவர்களுக்கு இழைக்கும் கொடுமைகளை, தமிழ் நாட்டார் எளிதில் அறிய முடிவதில்லை. காரணம் 'தனியரசு' என்ற திரை மறைப்பதேயாகும். அந்தத் திரைக்குப் பின்னால் நடக்கும் கொடுமைகளை "அபயம்; ஆதரியுங்கள்!" என்ற தலைப்பில் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ள கடிதம் அறிவிக்கும்.

திருவிதாங்கூரில் மக்களாட்சியை நிறுவ அங்குள்ள 45 லட்சம் மலையாளிகளைப்போலவே, 15 லட்சம் தமிழர்களும் தியாகம் செய்தனர். ஆனால், மன்னரின் பொறுப்பாட்சிப் பிரகடனத்திற்குப் பின்னர், அங்கு நடப்பது மக்களாட்சியல்ல; மலையாளிகளாட்சி. அன்று பொறுப்பாட்சிப் போராட்டத்தை நசுக்க எதேச்சாதிகார ஆட்சி என்னென்ன கொடிய முறைகளைக் கையாண்டதோ, அதைவிட மிகக் கேவலமான முறைகளை இன்றைய மலையாள ஆட்சி தமிழரின் உரிமைப் போரை நசுக்கக் கையாளுகின்றது. இதற்கு சமஸ்தான காங்கிரசும் ஆதரவு கொடுக்கின்றது. திருவிதாங்கூர் தமிழர்களின் கோரிக்கை என்ன?

வருங்கால வேலைத் திட்டம்

இந்திய விடுதலைப் போரில் விழிப்புற்று வீறு கொண்டு போரிட்டது தமிழகம். ஆங்கில ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபெற்ற பின்னர், தமிழகம் மீண்டும் தனிநாடாகுமா? அதில் தமிழரசு தோன்றுமா? அந்த அரசில் சோஷலிஸம் மணக்குமா? என்றெல்லாம் பல ஆண்டுகளாகவே எண்ணி எண்ணி ஏங்கினர் தமிழரில் சிலர். ஏன்? பலர் என்றாலும் பொருந்தும்.

இப்படித் தனித்தனியாகப் பல ஆண்டுகளாக ஒரு சில தமிழரிடையே தனித்தனியே உருக்கொண்ட எண்ணங்கள் அனைத்தும் அரசியலுக்குரிய அத்தனை அங்கங்களும் நிரம்பப்பெற்று மக்கள் ஆமோதிப்பதற்குரிய பக்குவமான காலத்தில் இன்று 'சோஷலிஸத் தமிழ்க் குடியரசு' என்ற கோஷமாக நாடெங்கும் பரவி வருகிறது. அதற்குக் காரணம் தமிழரசுக் கழகமே என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆம். தமிழரின் சுதந்திரக் கோரிக்கை கருவாகி, உருவாகி, உருவில் கலந்த உயிராகி இன்று ஓராண்டு குழவிப் பருவத்திலுள்ள கட்சியாகக் காட்சி யளிக்கிறது.

தமிழரசுக் கட்சி தனது ஓராண்டுப் பருவத்தில் அரிய பெரிய செயல்கள் பல ஆற்றியுள்ளது.

தெற்கே குமரி முனையில் 15 லட்சம் தமிழர்கள் தமிழ்நாட்டோடு சேர்ந்து புதிய தமிழகத்தை உருவாக்கப் புரட்சி செய்கின்றனர். சிறைக் கம்பிகளுக்

குப் பின்னே நூற்றுக்கணக்கான இளஞ் சிங்கங்கள் அடைபட்டுக் கிடக்கின்றன. அடக்குமுறைகளால் அங்குள்ள தமிழர்கள் அஞ்சிவிடவில்லை; ஆவேசங் கொண்டு சகோதர மலையாளிகளைப் பழிக்கவும் முனையவில்லை. ஆம், பகைமை கலவாத உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய இன எழுச்சிக்கு அன்றுமுதல் இன்றுவரை துணைபுரிந்து வருவது தமிழரசுக் கழகமேயாகும்.

இனி, வடக்கெல்லையாகிய திருப்பதியைப்பற்றி தமிழரசுக் கழகம் தோன்றும் முன்பு சிந்தித்தவர்கள் மிகக் குறைவு. அதைப்பற்றி சிந்தித்த சிலரும் செயலாற்றத் துணிந்தார்களில்லை. ஆனால் இன்றைய நிலை அப்படியில்லை. தமிழரசுப் படை திருப்பதி சென்று திரும்பியபிறகு ஆந்திரரின் பேராசையில் ஆட்டங் கண்டுவிட்டது. "இது ஆந்திர நாட்டின்மீது படையெடுத்ததுபோலாகும். விட்டேனு பார்! படையெடுப்புக்குப் பதிலளித்தே தீருவோம்" என்றார் ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவர், திரு. என். ஜி. ரங்கா.

ஆந்திரக் கம்யூனிஸ்டுகளுக்கு தமிழரசுக் கட்சியை நேரில் மிரட்டத் துணிவில்லை. திருப்பதியைத் திருப்பிக் கொடுக்கவும் மனமில்லை. எனவே, தமிழரசுக் கழகத்தின் வடக்கெல்லை மீட்சி இயக்கத்தை எதிர்க்க தமிழகக் கம்யூனிஸ்டுகளைப் பயன்படுத்துகின்றனர். தட்டிக் கேட்க ஆளில்லாக் காரணத்தால் ஆந்திரத் தம்பி சண்டப்பிரசண்டம் செய்தான்.

இன்ருே, தட்டிக் கேட்கத் தமிழரசுக் கழகம் தோன்றிவிட்டது. எனவே ஆந்திர ஆதிக்க வாதிகள் ஆத்திரம் கொள்கின்றனர்.

புதுக்கோட்டை அரசியல் போராட்டத்தில் சமரசம் காண அங்குள்ள சர்வ கட்சியினரும் மன்னரால் அழைக்கப்பட்டனர். ஆனால், புதுக்கோட்டைத் தமிழரசுக் கட்சி மட்டும் அழைக்கப்படவில்லை. அப்படி அழைக்கப்படாததற்கு அரசாங்கச் சார்பில் காரணங் காட்டப்பட்டது.

> " தமிழகத்தின் ஒரு தாலூக்காவாகக் கூடக் கருதப்படாத, 1179 சதுர மைல்கள் கொண்ட துண்டு நிலம் ஒரு தனியரசாம்! என்ன புதுமை? ஏகாதிபத்தியங்களெல்லாம் மண்ணில் மறையுங்காலத்தில் இந்த எதேச்சாதிகார மன்னர்களுக்கு மட்டும் வாழ்த்து கூறுவதா? முடியவே முடியாது. புதுக்கோட்டை நிலத்தைத் தமிழகத்தோடு இணைத்தே ஆகவேண்டும்."

சென்னைத் தமிழரசுக் கழக மாநாட்டின் தலைமையுரையிலிருந்து மேற்சொன்ன பகுதியை எடுத்துக் காட்டி, தமிழரசுக் கட்சியினர் மன்னராட்சியை விரும்பாததால், மன்னர் கூட்டும் சமரச மாநாட்டில் அவர்களுக்கு இடம் தருவது முடியாதென காரணம் காட்டப்பட்டதாம். ஆம். புதுக்கோட்டை மன்னருக்குத் தமிழரசுக் கழகம் புரட்சிக் கட்சியாகப்படுகிறது. இதற்காக நாம் பெருமை அடைகிறோம்.

அத்தகைய நிலைமையில் மதியாதார் தலைவாசலில் மதிப்புப்பெற மனுப் போடாத புதுக்கோட்டைத் தமிழரசுக் கழகத்தாரையும் பாராட்டுகிறோம்.

தமிழகத்திலும் தமிழரசுக் கட்சியைப்பற்றிய சலசலப்புகள் தோன்றிவிட்டன. இவையெல்லாம் ஆதிக்க வாதிகளின் வட்டாரத்திலேதான் என்னும் போது நமக்கு ஆறுதல் ஏற்படுகிறது. உண்மையான முற்போக்குவாதிகள், அவர் எந்தக் கட்சியினராயி னும், தமிழரசுக் கழகத்திற்கு ஆதரவு காட்டியே வருகின்றனர்.

கடல் கடந்த தமிழர் வாழும் மலேயா நாட்டில் வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளில் தமிழரசுக் கழகத்தின் கோரிக்கைகளுக்கு ஆதரவு திரண்டு வருகிறது. கட்சியின் கிளைகளுங்கூட அமைந்து வரு கின்றன. இத்தனை ஆண்டுகளிலும் இல்லாதவாறு இவ்வாண்டு அங்கு வ. உ. சி.யின் திருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. அதன் காரணமென்ன? தமிழரசுக் கழகத்தின் செல்வாக்கு அங்கு காட்டாற்று வெள்ளம்போல் பரவி வருவதே யாகும்.

தமிழகத்தில் இது வரை 60 கிளைக் கழகங்கள் அமைந்து விட்டன. மாநிலத் தமிழரசு மாநாடு வெற்றிகரமாக முடிந்து விட்டது. அம் மாநாட்டில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் பத்திரிகைகள் மூலம் அகில இந்தியா வெங்கும் பரப்பப்பட்டுள்ளன. ஆனால் இது மட்டும் போதாது. தமிழகத்தின் விடு

தலைக்கு—தமிழினத்தின் நல்வாழ்வுக்கு—பாடுப
தமிழரசுக் கட்சியினரே யன்றி, எல்லாக் கட்சி
ரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இது ஒரு
இயக்கமாகும். அத்துறையில்—தமிழக விடு
போரில்—பிற கட்சியினர் கலக்கும்படி செ
தமிழரசுக் கட்சியினர் பாடுபட வேண்டும்.
யின் வெற்றிக்கு அதுவே அடிப்படை யாகும்.

கடந்த ஓராண்டில் இத்துறையில் தமிழ
கழகம் தனது முழு சக்தியையும் பயன்படுத்தி
ளது. சர்வ கட்சித் தலைவர்களும், அதில் முற்
குள்ள இளைஞர்கள், ஒரே மேடையில் தோன்
தென்ற நிலை இந்த ஓராண்டில் பன்முறை ஏற்ப
தைத் தமிழர் நன்கறிவர். இதை மக்கள்
வேற்றனரே யன்றி, வயிறெரிய வில்லை.
திட்டமின்றி, நாட்டை நடத்தும் திறனி
ஆதிக்க புத்தி ஒன்றையே லட்சியமாகக் கொ
ஒரு சிலருக்கு இது ஆத்திரத்தை உண்டாக்கி
டது. எனவே, இந்த சர்வ கட்சி ஒற்றுமை
இளந் தலைவரின் ஐக்கிய முன்னணியை—ஓர
னும் சாத்தியமாக்கிக் காட்டிய தமிழரசுக் க
தைத் தாக்க முனைந்து விட்டனர். இதைக்
நாம் சிறிதும் ஐயம் கொள்ள வில்லை. அந்தத்
தல்களோடு சேர்த்து, கட்சிகளின் தலைமைப்
கள் நம்முடைய கோரிக்கையைத் தாங்கியும்
பேச வேண்டி யிருக்கிறது.

இத்தனை நாளும் கண்ணை மூடிக் கெ
'திராவிடர்' என்ற சொல்லை மட்டும் கூறிவ

கள், 'திராவிடர்' அல்லது 'தமிழர்' என்று கூற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. 'திராவிட நாடு, திராவிட அரசு' என்றெல்லாம் ஒரு நாட்டுணர்வை, ஓரரசுத் தத்துவத்தைப் பரப்பி வந்தவர்கள், இன்று "மொழிவாரி நான்கு நாடுகள் கொண்டதே திராவிட நாடு. அந்த நான்கு நாடுகளின் தனித்தனி அரசுகளின் கூட்டரசே திராவிட அரசு" என்று விளக்கம் செய்ய வேண்டிய வேலை ஏற்பட்டு விட்டது. ஆம். வெறும் திராவிடமல்ல; 'ஐக்கியத் திராவிடம்'. இதுதான் திராவிடர் கழகத்தின் இன்றைய அரசியல் பேச்சு. அதற்கும் ஆட்சேபனை எழும்பும்போது, "தமிழ் நாடே, திராவிட நாடு" என்று விந்தியத்தை விட்டு வேங்கடத்தைத் தாவும் குரலைக் கேட்கிறோம். இந்தப் பெயரும் மாறி, "தமிழ் நாடு தமிழ் நாடுதான்" என்று கூறும் நாளோ, அல்லது "பெயரைப்பற்றி சர்ச்சை வேண்டாம். தமிழகத்தின் விடுதலைக்கு ஒன்றுபட்டுழைப்போம்" என்று உறவு கொள்ளும் நாளோ அண்மையில் வரும் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

திராவிட கழகத் தலைமைப் பீடத்தின் ஆவேசமான தாக்குதல்களைக் கண்டு தமிழரசுக் கழகத்து இளைஞர் பலர் சீற்றங் கொள்கின்றனர். அவர்களுக்கு ஒன்று கூறுகிறோம். திராவிடர் கழக வட்டாரத்தில் ஆழ்ந்து சிந்திக்கும் அறிஞர் பலர் நமது கட்சியின் கோரிக்கைகளுக்கு வெளிப்படையாக ஆதரவு காட்டி வருவதை நினைப்பூட்டுகிறோம். கல்லூரி இளைஞர்கள், தமிழாய்ந்த புலவர்கள், அரசியல் அறிஞர்கள் பலரும் தமிழரசுக் கழகத்தின் கோரிக்கை

களுக்கு ஆதரவு காட்டுவதை மறந்து விடவேண்டாம். இந்த ஆதரவு பெருக வேண்டுமானால்—நமது கட்சியின் அடிப்படைக் கொள்கையாகிய சர்வ கட்சி ஒற்றுமையை வளர்க்க வேண்டுமானால்—நாம் தாக்குதல்களைக் கண்டு நிலை குலையாது, நேர்வழியில் செல்ல வேண்டும்.

தமிழரசுக் கழக அன்பர்களை—நாடெங்குமுள்ள இளைக் கழகத்தினரை — வேண்டுகிறோம்: கடமையைச் செய்வோம். முடிந்த இடத்து எல்லாக் கட்சியினருடனும் இணைந்து நின்று வேலை செய்வோம். முடியாத இடத்துப் பிரிந்து நின்று, தனி வழி சென்றேனும் தமிழ் நாட்டைத் தமிழருக்காக்குவோம். இன்று நம்மைத் தாக்குவோர் நாளை நம்மை ஆதரிப்போராக மாறப் போவது திண்ணம். இனி நமது வருங்கால வேலைகளைச் சிந்திப்போம்.

தமிழரசுக் கழகத்தில் பணமூட்டைகள் இல்லை. பண மூட்டைகளை வருந்தி அழைக்க விருப்பமும் இல்லை. எனவே, நமது கட்சியை நடத்தக் கையில் பொருளில்லை. என்றாலும், சோர்ந்து விடவேண்டாம். காசாசை யின்றி, நாட்டுக்குழைக்கும் நல்லெண்ணமுடைய இளைஞர்கள் நமக்கு நிறைய உண்டு. அதற்கு மேலும் பொருள் வேண்டிய இடத்து மக்களிடம் கையேந்துவோம். அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. விரைவில் தமிழரசு நிதி திரட்ட தீர்மானித்து விட்டோம். அதைப்பற்றிய செய்தி அடுத்த இதழில் விரிவாக வெளிவரும்.

அடுத்து வரவிருக்கும் தைப் பொங்கல் வாரத்தில் தமிழகத்தின் கிராமங்கள்தோறும், நகரங்கள் தோறும் கழகங்களை அமைக்குமாறு இன உணர்ச்சி பெற்ற இளைஞர்களை வேண்டுகிறோம்.

தமிழ் மக்களுக்கு நன்றி

"தமிழ் முரசு" பத்திரிகை வடிவில் தோன்றி ஓராண் முடிந்துவிட்டது. இந்த "முரசு" இரண்டாவது ஆண்டி முதலிதழாகும். 'முரசு'க்குப் போதிய மூலதனமில்லை சொந்த அச்சகமில்லை. இவ்விரண்டும் ஒரு பத்திரி நடத்துவதற்கு இன்றியமையாத கருவிகள். என்றாலு கைமாறு கருதாத இளைஞர்களின் உழைப்பாலும் தமி மக்களின் பேராதரவாலும்தான் 'முரசு' இந்தஓராண்டு ஒலிக் முடிந்தது. "முரசு" எந்தக் கொள்கைக்காகத் தோன் யதோ அந்தக் கொள்கையில் அது நாளுக்கு நாள் மு னேறி வருவதைத் தமிழர் நன்கறிவர்.

இன்று தமிழகத்தில் தோன்றியுள்ள மொழிவழி இ உணர்ச்சிக்கு, தமிழரசுக் கிளர்ச்சிக்கு — தமிழ் மொ வளர்ச்சிக்குத் "தமிழ் முரசு" ஆற்றியுள்ள தொண்டு அ விடற்கரிது. அதை விரித்துரைப்பது தற்புகழ்ச்சியா மாதலால் இத்துடன் நிறுத்துகிறோம்.

இனியும் தமிழகத்தில் சுதந்திர சோஷலிஸக் குடியர அமையும்வரை "தமிழ் முரசு" இடுக்கண்கள் எவ்வள அடுக்குவரினும், ஓசைகுன்றாது தமிழினத்தின் உரிமைக் ஒலித்து வருமென்று உறுதி கூறுகிறோம்.

இத்தனை நாளும் "முரசு"க்கு ஆதரவு காட்டிய தமி மக்களுக்கும் உழைப்பைநல்கிய இளைஞர்களுக்கும், கட்டுரை கவிதை, படம் ஆகியவற்றை வழங்கிய நண்பர்களுக்கும் அ சடித்துத் தந்த "செங்குந்தமித்திரன்" அச்சகத்தாருக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தமிழரசுப் படை

சென்னை வ. உ. சி. ஞாபகார்த்த சங்கத்தாரின் தமி
ரசுத் தொண்டர் படையைச் சென்ற டிசம்பர் 21-ந் தே
காலையில் திரு. ம. பொ. சி. பார்வையிட்டார்.

சூளை கார்ப்பொரேஷன் சிறுவர் விளையாட்டு மை
தானத்தில் தொண்டர்படைத் தளபதி ஏ. ரா. பக்தவத்சல
தலைமையில் படையினரின் அணிவகுப்பு நடைபெற்ற
திரு. ம. பொ. சி. ராணுவ மரியாதையுடன் வரவேற்
பட்டார்.

அணிவகுப்புக்குப் பின்னர், வ. உ. சி. ஞாபகார்த்
சங்கத் தலைவர் திரு. ப. எ. முருகேசம் தலைமையில் கூ
கூட்டத்தில் திரு. மூ. கேசவலு, தலைவர் ம. பொ. சி.
சங்கத்தின் சார்பாக வாழ்த்து இதழ் வாசித்தளித்தார்.

திரு. சி. வேங்கடசாமி பேசுகையில் தமிழ் நாட்டி
எதிர்கால நல்வாழ்வுக்கு இளைஞர்களே காரணமாவார்
என்பதை எடுத்துக் காட்டி, உறுதியும் உற்சாகமு
கொண்டு பொதுநலத் தொண்டு செய்வதற்காகத் தோன்
யுள்ள தமிழரசுப் படையை மிகவும் பாராட்டினர்.

அதற்குப்பின் தலைவர் ம. பொ. சி. பேசியதன் சுரு
மாவது :—

"தமிழரசுப் படையின் அணிவகுப்பைக் கண்டு மகி
தேன். தமிழரசுக் கழகக் கொள்கைகள் வெற்றிபெ
தொண்டர்படை அவசியம் வேண்டும். இதை முதன்
லாக ஆரம்பித்த பெருமை சூளை இளைஞர்களைச் சாரும்.

அணிவகுப்பு நடைபெறும்போது இந்தி மொழியில் கட்டளைகளை வெளியிடுவது தவறு என்பதை நீங்களே உணர்ந்து சொல்வதைப் பார்த்துக் களிப்பெய்துகிறேன். கூடியவிரைவில் தமிழிலேயே அவற்றை ஆக்குவோம். நம் சொந்த மொழியில் சொன்னலதான் உண்மையான சக்தி பிறக்க முடியும். மற்றைய வெல்லாம் சென்ற காலத்திய அடிமை வாழ்வின் விளைவாக நாம் கையாண்டு வரும் வேண்டாத சரக்குகளேயாகும்.

இத்தகைய தொண்டர் படைகள் அமைவதால் இளைஞரின் இனவுணர்ச்சியும், மொழிப்பற்றும் தீவிரமாக வளரும் என்பதில் ஐயமில்லை. அதோடன்றி, தேகப்பயிற்சி வாயிலாக உடல் வலிமை மிகுவதுடன், படையில் சேரும் இளைஞர்களுக்கிடையே தோழமை உணர்ச்சியும் கட்டுப்பாட்டுணர்ச்சியும், கடமையைச் சரிவரச் செய்யும் திறமையும் செழித்தோங்கும்.

எனவே, இவ்விதமான படைகளைத் தமிழரசுக் கழகம் உள்ள ஒவ்வோரிடத்திலும் அமைக்க இளைஞர்கள் முன்வருவார்களாக!

தமிழ் நாட்டின் பெருமைக்குரிய—தமிழ் இனத்தின் உரிமைக்குரிய—தமிழ் மக்களின் பண்டைச் சிறப்புக்குரிய—சின்னமாக தமிழ்கொடியின் கீழ்-புலி, கயல், வில் பொறித்த புனிதக் கொடியின் கீழ்—தமிழரனைவரும் ஒன்று திரண்டு சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசை அமைக்கப் பாடுபடுவோமாக!

ஆசிரியருக்குக் கடிதம்

கோவை மாநாட்டுத் தலைவர் தேர்தல்

ஐயா,

தமிழ்நாடு அரசியல் மாநாட்டின் தலைமைப் பதவிக்கு தாங்களும் அபேட்சகர் பத்திரம் கொடுத்திருப்பதை அறிந்து மகிழ்வெய்துகிறேன்.

தற்போதைய சூழ்நிலையில் புதுக்கட்சி ஒன்று ஏற்படுத்தி அதன் மூலம்—தமிழகத்திற்கு—சேவை செய்ய முயலுவதை விட, கடந்த 30 ஆண்டுகளாக தேசத்தின் உணர்ச்சியைத் தட்டி எழுப்பி, அன்னிய ஆதிக்கத்தை விரட்டிய காங்கிரஸ் கட்சியின் மூலமே இந்திய இனங்களுக்கு, குறிப்பாக தமிழ் இனத்தவருக்கு பூரண உரிமை கிடைக்கும்படியும், மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், பாடுபடுவதே சுலபமான ராஜ தந்திரம் கொண்ட முயற்சி என்பது என் தாழ்மையான கருத்து.

தங்களுடைய கொள்கைகளுக்கு தற்போது தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர்கள் பெரிதும் உடன்படுவார்கள் என்றே நம்புகிறேன். மாறுபட்ட அபிப்ராயமுள்ள தலைவர்களையும் உங்களுடைய உயர்ந்த கொள்கைகள் சீக்கிரமே வழிக்குக் கொண்டுவந்து விடும்; சற்று முயற்சித்தீர்களானால். இப்படியாக காங்கிரஸ் கட்சி தலைவர்களை உங்களுக்கு—தமிழக முன்னேற்றத்துக்கு—ஆதரவாளர்களாக ஆக்கிக் கொண்டால, நம் நோக்கம் வெகு விரைவில் நிறைவேறிவிடும்.

எனவே, தமிழ் நாடு அரசியல் மாநாட்டுக்குத் தாங்கள் தலைவராக வர போட்டியிருந்தாலும் தேர்தலுக்கு நிற்கு

று வேண்டுகிறேன். அதில் வெற்றியோ தோல்வியோ துவரினும், அதற்கேற்ப நாம் நம் வேலைகளை மேற்கொள்ள ாம்.

இத் தேர்தல் தமிழ் நாட்டின் போக்கை தரிந்துகொள்ள ஒரு சாதனம், வாய்ப்பு. இதைப் பயன் டுத்திக்கொள்ள வேண்டியது தங்கள் தலையாய கடமை.

தமிழ் நாட்டின் நன்மைக்காக, தாங்கள் தமிழ் நாடு ரசியல் மாநாட்டின் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவீராக!

தங்கள் அன்புள்ள,

ருப்பாசூர்
22-12-47

ரா. சம்பந்தன்.

றிப்பு:—மாநாட்டுத் தலைவரே மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகிவிடுவாரென்று நண்பர் நம்புவதாகத் தெரிகிறது. இது சரியல்ல. மாநாட்டின் போதும், அதற்குப் பிறகும் திரு. காமராஜரே மாகாண காங்கிரஸின் தலைவராக இருப்பார். அதற்கு இப்போது தேர்தலில்லை. மேலும், அந்தத் தேர்தலில் போட்டியிடும் எண்ணமே எனக்குக் கிடையாது. இந்தத் தேர்தலில் நான் போட்டியிடுவதற்குக் காரணத்தை கடந்த 'தமிழ் முரசு' தலையங்கம் உணர்த்தும். நான் பெறுவதிலும், எனது அரசியல் கொள்கையிலும் நண்பர் கொண்டுள்ள ஆர்வத்திற்கு நன்றி.

ஆசிரியர்.

..ாதல் விளக்கம்

[சி. வே.]

காதல் உணர்ச்சியைப் பற்றிப்பாடாத புலவர்களே உலகத்தில் இல்லை என்று கூறலாம். எத்தனை பேர் ..டினாலும் அதன் பெருமை இன்னும் மிகுகின்றதே ..பாழிய குறைய இயலாது.

தமிழிலக்கிய உலகிலே நுட்பமான செய்திகளை மிகச் ..ருங்கிய முறையில் வெளியிடும் ஆற்றல் திருவள்ளுவரின் ..ரிவுடைமையாகும். காதல் உணர்வை அவர் அழகுபட ..ளக்கும் முறை எத்தகைய வரையும் வியப்புக்கடலில் ..ழ்த்தாமல் இருக்காது.

நெருப்பை நாம் நன்கறிவோமல்லவா? அதைத் தொட் ..ால் என்ன நேரும் என்பதையும் உணர்ந்திருக்கிறோம். ..து பொருள்களை எரித்து நாசம் செய்வதையும் கண் ..ருக்கிறோம்.

தம் விருப்பம் கைகூடாத போது காதலரின் உள்ளம் ..குந்த வேதனைக் குள்ளாகிறது; உடம்பிலுள்ள ஒவ்வோ ..ணுவும் ஏக்கத்தால் வெந்து புண்ணாகிறது. இதைக் ..ணும்போது, காதல் உணர்வை ஒரு வகையான தீ ..ன்றே கூறத்தோன்றுவது இயற்கைதானே?

இத்தகைய எண்ணந்தான் திருவள்ளுவருக்கும் முத ..ல் தோன்றியிருக்கும். ஆனால் அத்துடன் நின்று விடா ..ல் மேலும் அதைப்பற்றி ஆராய்ந்தார். ஒரு பெரிய வேறு ..டு கண்டார்.

"தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற் சுடல் ஆற்றுமோ தீ"

என்று கேட்கிறார். "தொட்டால்தான் நெருப்பு சுடும். இந்தக்காதல் தீயோ விட்டால்கூட (அதாவது பிரிந்தால்) சுடுகின்றதே" என்று வியக்கிறார்.

இக்கருத்தை மற்றோரிடத்தில் இன்னும் சிறிது விளக்கமாக எடுத்துரைக்கிறார்.

"நீங்கில் தெறூஉங் குறுகுங்கால் தண்ணென்னும்
தீ யாண்டுப் பெற்றாள் இவள்"

(தெறூஉம் = எரிக்கும், தண்ணென்றும் = குளிரச் செய்யும்; யாண்டு = எங்கு.)

"இவளிடம் ஒரு புது வகையான நெருப்பல்லவா இருக்கின்றது! இந்த நெருப்பை விட்டு நீங்கினால் துன்பம் மிகுகின்றதே; நெருங்கினால் இன்பம் பிடிக்கின்றதே" என்று ஒரு தலைவன் கூற்றாகக் காதல் உணர்வின் தன்மையை வள்ளுவர் உணர்த்துகிறார். எல்லா உயிர்களுக்கும் இயல்பாக உள்ள காதல் அனுபவத்தை எவ்வளவு அழகாக பாட்டு வடிவில் அவர் வெளியிட்டுள்ளார்!

காதல் உணர்வு உலகில் என்றும் நிலைத்து நிற்பது போலவே, வள்ளுவர் கூறியுள்ள இந்தக் காதல் விளக்கமும் நிலைத்து நின்று தமிழினத்தின் அறிவு மேம்பாட்டை உலகமக்களுக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

‘ஜனசக்தி’ சீறுகிறது

ம. பொ. சி.

ஆந்திர நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவாக, ஆந்திர-தமிழகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தலைவர்கள் அண்மையில் வெளியிட்டிருந்த கூட்டறிக்கையை அனைவரும் அறிவர். அவ்வறிக்கையால், தமிழகத்திற்கு நேரவிருக்கும் கேடுகளை விளக்கி, 1-12-47 ‘தமிழ் முரசி’ல் யான் எழுதி யிருந்தேன். அதற்கு, 14-12-47ல் வெளிவந்த ‘ஜனசக்தி’யில் பதிலளிக்கப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டுகளின் கூட்டறிக்கையில், ‘நெல்லூர் தமிழ் நாட்டைச் சேர்ந்ததென்று நான் கூறுவதாகக் குறிப்பிட்டிருந்ததைக் ‘கலப்பற்ற பொய்’ என்று கண்டித்திருந்தேன். அதை “மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தக்க திருத்தம்” என்று கூறுகிறது ‘ஜனசக்தி’.

தமது கூற்று கலப்பற்ற பொய் என்பதை ஒப்புக்கொள்ளுமிடத்து, நேர்மையுள்ள எவரும் மன்னிப்புக் கோருவது இயற்கை. கம்யூனிஸ்டுகளிடம் அதை நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால், வருத்தமேனும் தெரிவித்திருக்கலாம். அதுவும் இல்லை; ‘மகிழ்ச்சிக்குரிய திருத்தம்’ என்கிறது கம்யூனிஸ்டுப் பத்திரிகை. பொய் சொன்னதற்காக வெட்கப்படவில்லை; வருந்தவுமில்லை; மகிழ்ச்சி கொள்கின்றனர் கம்யூனிஸ்டுகள். இதுதான் கம்யூனிஸ்டுகளிடம் சிக்கியுள்ள மார்க்ஸீஸம் போலும்!

கலகம் செய்வது யார்?

கலப்பற்ற பொய் சொன்னதில், ஆந்திர கம்யூனிஸ்டுகளுக்கும் பங்குண்டு. ஆனால், பொய்யை மகிழ்ச்சியுடனேனும் ஒப்புக்கொள்ள

தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் தான் முன் வருகின்றனர். பொய்யைச் சொல்லும் போதிருந்த ஐக்ய முன்னணி அதைத் திருத்துவதில் இல்லாததேனே?

இந்தப் பொய், ஆந்திர நாட்டிலும் பரவி, ஏற்கனவே தமிழர் மீது ஆந்திரருக்குள்ள பகை அதிகமாவதற்கு, ஆந்திர—தமிழகக் கம்யூனிஸ்டுகள் அடிகோலி விட்டனர். இவர்கள்தான் ஆந்திரர்-தமிழர் பகைமையை வளர்க்க நான் வழி செய்வதாகப் பழி சுமத்துகின்றனர். எதிலார் குற்றம் பார்க்கும் இவர்கள் தம் குற்றம் பார்க்கும் அறிவைப் பெறாதது ஏனோ?

ஆந்திரர்களையும் கண்டித்தார்களாம்!

கூட்டறிக்கையில், என்னையும் திரு. காமராஜரையும் மட்டும் 'அநீதிவான்கள்' என்ற பொருள்பட கண்டித்திருந்ததை எனது கட்டுரையில் எடுத்துக் காட்டினேன். அதற்கு, எங்களைப் போன்றே ஆந்திரர்களையும், 'அபத்தமான' என்பது போன்ற வார்த்தைகளால், அழுத்தமாகக் கண்டித்திருந்ததை ஆதாரம் காட்டுகிறது 'ஜனசக்தி'. "இந்த வாக்கியங்கள், ம. பொ. சி. கண்ணில் படவில்லையா? 'முரசு' வாசகர்களுக்கு, உண்மையை மறைத்தும், திரித்தும் கூறுகிறார்? என்றெல்லாம், அதிகாரக் குரலில் அதட்டிக் கேட்கிறது.

தனி நபர்களின் பெயர்களைக் கூறிக் கண்டிக்குமிடத்து, வார்த்தைகளை நேர்மையாகக் கையாள வேண்டுமென்று தான், நான் குறிப்பிட்டிருந்தேன். மனித உணர்ச்சியை மதிக்கும் அறிவு படைத்த எவரும் இதை மறுக்க முடியாது. உண்மை இவ்வாறாக, கூட்டறிக்கையில் எங்கோ ஒரு மூலையிலிருந்த சில வரிகளை,-வார்த்தைகளை எடுத்துக்காட்டி, 'ஆந்திரர்களையும்தான் கண்டித்தோம்' என்கிறது 'ஜனசக்தி'. இது அரசியல் ஞானமல்ல. ஆந்திரர்களைக் குறை கூறும்படி, மனித உணர்ச்சிக்கு மதிப்புத் தராத கம்யூனிஸ்டுகளிடம் நான் மனுப்போடவில்லை.

பேரம் பேச இடமிருக்கிறதாம்!

"கம்யூனிஸ்டுகளின் கூட்டறிக்கை, தமிழக-ஆந்திரப் பிரச்னைக்கு இறுதித் தீர்ப்பு அல்ல" என்று கூறுகிறது 'ஜனசக்தி'. கம்யூனிஸ்டுகள் முன் விடுத்த அறிக்கையிலிருந்து, கம்பீரமான நடையில் பின் வாங்குவதை மேற்சொன்ன வரிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. கூட்டறிக்கை இறுதித் தீர்ப்பு அல்லவானால், கம்யூனிஸ்டுகள், வாலை விட்டு ஆழம் பார்த்து, தமிழர் ஏமாந்தால் பின்னர் காலைவிட எண்ணினர் போலும்! இது பேரம் பேசும் புத்தியல்லவா?

> "சரண்டல் கூட்டங்கள் இவ்விஷயங்களை வியாபாரத் துறையைப்போலக் கருதி, மற்ற தேசீய இனத்துக்கு நஷ்டம் ஏற்படும் வகையில் பேரம் பேசுவது போல் நாம், இப்பிரச்சினையை அணுக முடியாது"

என முதலில் வந்த கூட்டறிக்கை கூறிற்று. ஆனால், 'ஜனசக்தி', இதிலிருந்து பின்வாங்கி, பேரம் பேச இடம் இருப்பதாக ஆந்திரர் சார்பாக தமிழ் மக்களுக்கு ஆறுதல் கூறுகிறது. இதுவும் விஞ்ஞான ரீதியான பிரசாரத் தந்திரம் போலும்!

> "சென்னை அரசாங்கமும், சென்னை நகர கார்ப்பரேஷனும், சென்னை கார்ப்பரேஷன் பள்ளிகளில், தெலுங்கு போதனா பாஷையாக, இருப்பதை ஒழித்து வரும் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்."

என்றது முதலில் வந்த கூட்டறிக்கை. இதற்கு,

> 'சென்னை நகரில், தெலுங்கை ஒழித்துக்கட்ட எந்தத் தமிழரும் திட்டமிட்டதில்லை.
>
> சென்னை அரசாங்க அமைச்சர் குழுவின் தலைமையும், நகராண்மைக் கழக மேயர், கமிஷனர் பதவிகளும் பெருவாரி

> யான சந்தர்ப்பங்களில் ஆந்திரர்களிடமே இருந்திருக்கின்றன.

என்று எடுத்துக்காட்டி இருந்தேன் ; கட்சிச் சுயநலம் காரணமாக, ஆந்திர ஆதிக்க வாதிகளுக்கு ஆதரவு காட்ட முன்வந்த கம்யூனிஸ்டுகளுக்கு எனது எடுத்துக்காட்டு எரிச்சலை உண்டுபண்ணி விட்டது.

> ஆகஸ்டு 15-ம் தேதிவரை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், இந்த நாட்டில் ஆட்சி புரிந்ததை, ம. பொ. சிக்கு நினைவூட்டுகிறோம்.
>
> பனகல் அரசரையும், பொப்பிலி அரசரையும், ஆந்திர மக்களின் பிரதிநிதிகளாக, கம்யூனிஸ்டுகள் கருதியதில்லை. ம. பொ. சியை அரசியல் வாதியாக வளர்த்த காங்கிரசும் அம்மாதிரி கருதியதில்லை. பனகலும் பொப்பிலியும், ஏகாதிபத்திய ஏஜண்டுகளாகவே உழைத்தார்கள் என்பதை ம. பொ சி மறந்துவிட்டாலும், அல்லது மறைத்தாலும், தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள்.

ஆகஸ்டு 15-ம் தேதிவரை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவை ஆண்டதால், சென்னையில் தெலுங்கை ஒழித்த (?) கொடுமைக்கு ஏகாதிபத்தியமே காரணம் என்றும், அந்த ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டுகளாகவே பனகல் அரசரும், பொப்பிலி அரசரும் பதவி வகித்ததால், தெலுங்கு மொழியைக் காக்கத் தவறிவிட்டனர் என்றும் 'ஜனசக்தி' ஆவேசமாக சுற்றி வளைத்து பதிலளிக்கிறது.

பனகலும், பொப்பிலியும் ஆந்திர மக்களின் பிரதிநிதிகள் என்று கம்யூனிஸ்டுகள் கருதியதாக நாம் கூறவேயில்லை. கூறாத ஒன்றைக் கூறியது போன்று கொண்டு பதிலளிப்பது பித்தலாட்டப் பிரசாரம். அந்த "அரசர் பெருமான்களை" ஏகாதிபத்திய

ஏஜண்டுகள் என்று காங்கிரஸ் கருதியதையும் கம்யூனிஸ்டுகள் நமக்கு உணர்த்தத் தேவையில்லை. அவர்களை மட்டுமல்ல, 1942 லிருந்து 1944 வரையில், யுத்த ஆதரவுப்பிரசாரம் செய்த கம்யூனிஸ்டுகளைக் கூடத்தான் காங்கிரஸ், ஏகாதிபத்திய ஏஜண்டுகளாகக் கருதியதென் பதையும் நாம் மறக்கவில்லை. தோழர்களும் மறக்கவோ மறைக்கவோ முடியாது.

ஏகாதிபத்தியம் சென்னையில் தெலுங்கை ஒழித்து தமிழை வளர்க்கக் காரணம் என்ன? இதை 'ஜனசக்தி' விளக்கவில்லை. அது உண்மையென்றே கொண்டாலும், 'ஜன சக்தி'யே கூறுவது போன்று, ஆகஸ்டு 15ந் தேதியோடு 'செத்து மடிந்த' ஏகாதிபத்திய ஆட்சியை, இரண்டு மாதங்களுக்குப் பிறகு நவம்பர் இறுதியில் வெளிவந்த கம்யூனிஸ்டுக்கூட்டறிக்கை, வன்மை யாகக்கண்டிப்பதில் அர்த்தமென்னவோ? ஏகாதிபத்தியம் தெலுங்கை ஒழித்ததனால்தான் தமிழர்க்குரிய சென்னையை ஆந்திரர் கேட்கத் துணிந்தார்கள் என்று கம்யூனிஸ்டுகள் கூறுவது மொட்டைத் தலைக் கும் முழங்காலுக்கும் முடிபோடுவதாகவே இருக்கிறது.

உண்மை என்னவெனில், கூட்டறிக்கை தயாரித்தவர்கள், சென்னையில் தெலுங்கை ஒழித்தது தமிழர் என்றே எண்ணினார்கள். அதனால்தான் 'தெலுங்கு போதனா பாஷையாக இருப்பதை ஒழிந்து வரும் போக்கை' என்று நிகழ் காலத்தில் குறிப்பிட்டார்கள்.

என்னை, அரசியல வாதியாக வளர்த்தது காங்கிரஸ்தான் என் பதைக் கம்யூனிஸ்டுகள் சார்பாக 'ஜனசக்தி' எனக்கு நினைப்பூட்டு கிறது. ஆம்; அது உண்மை. அதே காங்கிரஸ்தான், கம்யூனிஸ்டு களையும் அரசியல் வாதிகளாக வளர்த்துவிட்டது. என்னை அர சியல் வாதியாக வளர்த்த காங்கிரஸை நான் மறக்காததனால்தான், அதன் ஆணை வழி நின்று கடந்த மகாயுத்தம் ஏகாதிபத்திய யுத்தம் என்று கோஷம் செய்தேன். அதன் விளைவாக, இன்னல் பல உற்றேன்.

ஆனால், இன்று எனக்கு காங்கிரஸ் பக்தியைக் கற்றுத்தரும் கம்யூனிஸ்டுகள் அன்று என்ன செய்தார்கள்? அவர்களது காங்கிரஸ் பக்தி எந்த அளவில் இருந்தது? இதை நாடு அறியும். அறியாதவர்களுக்கு காங்கிரஸ் காரியக்கமிட்டி அலுவலகத்திலுள்ள ஏடுகள் அறிவிக்கும்.

தோழர்களே! வளர்த்துவிட்ட கட்சியின், வளரத்துணை செய்த நண்பர்களின் மார்பில் பாயும் நன்றி கெட்டத்தனம் எனது வாழ்க்கையிலேயே கிடையாது!

'தமிழ் இன உணர்ச்சி உடையார் எழுதிய ஏடுகளிலே, தமிழகத்தின் வரலாற்றை ஆராயுங்கள்' என, தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தேன். இதைக்கண்டு, 'ஜனசக்தி' ஆத்திரம் கொள்கிறது. கம்யூனிஸ்டுகளின் இன உணர்ச்சிக்கு—தமிழ் இலக்கிய ஞானத்துக்கு ஆதாரம் காட்ட தொழிலாளி வர்க்கத்திடம் அடைக்கலம் புகுகிறது.

"ம. பொ. சி. கூறினாலும் கூறாவிட்டாலும் நாம் மேன்மேலும் நமது வரலாற்றை ஆராய்வோம். தமிழ்க் குடியரசில் பல நூறு இளைஞர்கள், இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம். ஆனால், இன உணர்ச்சியைப்பற்றி தொழிலாளி வர்க்கத்திற்கு ம. பொ. சி. போதிக்கவேண்டாம்.........

தாயகத்தின் சுய நிர்ணய உரிமைக்காக மரணத்தைத் திரணமாக மதித்துப் போராடும் வர்க்கம் தொழிலாளி வர்க்கம். அதே சமயத்தில், மற்ற இனத்தின் உரிமையைக் கௌரவிப்பதில் லவலேசமும் தவறாத வர்க்கம் தொழிலாளி வர்க்கம்,

தமிழ்நாட்டு கம்யூனிஸ்டுகளுக்குத் தமிழ் இலக்கியத்தில் போதிய ஞானம் இருந்திருந்தால் துளசிதாஸ் ராமாயணமும் வியாஸபாரதமும் மட்டும் ரஷ்யாவுக்குப் போயிருக்குமா? சமயப் பொய்யர்களும், சாத்திரச்சழக்கர்களும், தமிழினப் பகைவர்களும் எழுதி வைத்த ஏடுகளைப் பாராது, எந்தப் பகுத்தறிவை கம்யூனிஸ்டுகள் ஒப்புக்கொள்கிறார்களோ, அந்தப் பகுத்தறிவு வழிப்பட்ட தமிழக வரலாற்றைப் படிக்க வேண்டுமென்றுதான் கூறினோம். அப்படியிருக்க, கம்யூனிஸ்டுகள் தங்களது இன வுணர்ச்சியை இலக்கியப்பற்றை ஆவேசத்துடன் நிரூபிக்கவேண்டியதன் அவசியமென்னவோ? அவர்களைப்பற்றி அவர்களுக்கே ஐயந்தோன்றியிருக்காதென நம்புகிறோம்.

மற்றும், தொழிலாளி வர்க்கத்தைப் பற்றிப் பேச தனக்கே ஏகபோக உரிமை உண்டென எண்ணுகிறது 'ஜனசக்தி'.

தொழிலாளிகளைப்பற்றிய உணர்ச்சி கம்யூனிஸ்டு தலைவர்கள் ஏட்டில்படித்தது; இயக்கத்தில் கலந்து உணர்ந்தது, ஆனால், நானோ தொழிலாளி; அதுமட்டுமல்ல, பரம்பரைத் தொழிலாளி. எனவே, தொழிலாளியின் உணர்ச்சி இன்னதெனப் படித்துத் தெரிந்ததை விட, இயக்கத்தில் கலந்து கண்டதை விட, என்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் அனுபவித்து உணர்ந்தது. இன்னமும் அனுபவித்து வருவது. ஆகவே, தொழிலாளி வர்க்கத்திலிருந்து என்னைப் பிரித்துப் பார்த்து கம்யூனிஸ்டுகள் எனக்குப் பாடம் போதிக்கவேண்டாம்.

மார்க்ஸியப் பாதையை நான் கிணறூட்டியதற்காக கம்யூனிஸ்டுகள் என்னைச் சாத்தானோடு ஒப்பிடுகின்றனர். முன்னெல்லாம் வேதத்தைப்பற்றி வியாக்கியானம் செய்ய, வேண்டிய இடங்களில் மேற்கோள் காட்டத் தங்களுக்கே உரிமை உண்டெனத் தலைமயங்கிப் பேசினர் ஒரு சாரார். அந்தணரல்லாதார் எவ்வளவு அறிஞராயினும்,

வடமொழி வல்லுநராயினும், வேதத்தின் உட்பொருளை உணரும் அறிவு அவருக்கு இருக்காதென ஓலமிட்டனர். தமது தீர்ப்புக்கு மாறாக வேதத்தைத் தீண்டுவோரை, ‘நீசர்’ என நிந்தித்தனர். இது முற்காலத்தில் வேதகோஷ்டியார் செய்த விபரீதச் செயல். அதே நிலையில் இருக்கிறது கம்யூனிஸ்டுகளின் போக்கு. மார்க்ஸீயத்தைப் பற்றி அவர்கள் சொல்ல நாம் கேட்கவேண்டும். நாம் சொல்வதானால், மார்க்ஸீயத்தோடு ஸ்டாலின் கூறிய வியாகியானத்தையும் சேர்த்தே சொல்ல வேண்டும். அது மட்டுமா? மார்க்ஸிஸம்—ஸ்டாலினிஸம் இவற்றோடு ஜோஷிஸமும் கலக்க வேண்டும். இம்மூன்றையும் சேர்த்துச் சொல்ல, சென்னை டேவிட்சன் தெருவில் அனுமதியும் பெற வேண்டும். இதுதான் ‘ஜனசக்தி’யின் தீர்ப்பாகும். அன்று வேதம்; ஆம்; இன்று மார்க்ஸீஸம் வேதகாலக் கொடுமைகள் வேறு உருவத்தில் நடமாடுகின்றன.

> “சென்னைக்குச் சமீபத்தில் இருப்பதால் வர்த்தக சலுகைகள் கிடைக்குமென்று சொல்லி, சித்தூர் ஜில்லா வர்த்தகர்களிடையே ஆசையை உண்டாக்கி ஆதரவு திரட்டுவது மார்க்ஸீயமல்ல. அப்பட்டமாகச் சொல்வதென்றால், சந்தர்ப்ப வாதமாகும். சைத்தான் பைபிளை மேற்கோள் காட்டுவதைப் போல் ஸ்டாலினை மேற்கோள் காட்டுவதில் பயனில்லை”

ஆம்; ‘சந்தர்ப்ப வாதி’ ‘சாத்தான்’ என்ற வசைமாரி வழங்குகிறது ‘ஜனசக்தி’. வர்த்தக சலுகைகள் கிடைக்குமென்று சித்தூர் ஜில்லா தமிழருக்கு நாம் ஆசை காட்டியதில்லை. சந்தர்ப்பத்துக்காக செல்வான்களை எல்லாம் கட்சியின் அனுதாப அங்கத்தினர்களாகும் விதி நம் கழகத்தில் இல்லை. சந்தர்ப்ப வாதம் என்பது தமிழ் சாதிக்கே தெரியாது. ஆனால், சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல் ‘கருத்துக்களை மாற்றி’, கோஷங்களைக் கற்பிக்கும் முறையை அப்பட்ட மார்க்ஸீய வாதிகளான கம்யூனிஸ்டுகளிடம் தமிழர் கண்டதுண்டு. ஆனால், அவற்றைக் கற்றதில்லை.

"சித்தூர் ஜில்லாவில் தமிழரசுக் கழகம் ஜனநாயகப் பிரசாரம் செய்வதாக ம. பொ. சி. கூறுகிறார். சென்னை சுதந்திர நகரமாக இருப்பதன் அவசியத்தை மார்வாரி பணமூட்டைகளும், ஐரோப்பிய பணமூட்டைகளும்கூட ஜனநாயக வழியில் விளக்கலாம். இது ஜனநாயகத்தைக்கேலி செய்வதாகும்."

என்கிறது சர்வாதிகாரத் தலைமையின் கீழ் ஜனநாயகத்தை வளர்க்கத்தோன்றியிருக்கும் 'ஜனசக்தி'. தமிழரசுக் கழகம் வேங்கடத்துக்குத் தெற்கே தமிழ் மக்களிடையே ஜனநாயக பிரசாரம் செய்வதை, மார்வாரி பணமூட்டைகளும், ஐரோப்பிய பணமூட்டைகளும் சென்னை சுதந்திர நகரமாக இருக்க வேண்டுமென்று பிரசாரம் செய்வதோடு ஒப்பிடுகிறது. இது இன உணர்ச்சியைக் கேலி செய்வதாகும். 'பணமூட்டை,' 'சரண்டல்,' 'இனவெறி,' 'பிளவுப்பாதை;' 'கலகத்துக்கு வழி' 'சந்தர்ப்ப வாதம்' என்ற சில வார்த்தைகளை வைத்துக் கொண்டு, வேண்டுமென்றே தமிழரசுக் கட்சியும் நானும் பணமூட்டைகளின் சரண்டல் பாதையில் போவதாக பழி சுமத்தும் பிரசாரத் தந்திரத்தை கம்யூனிஸ்டுகள் வெகு அற்புதமாக, ஆனால் அறிவுக்குப்பொருந்தாத வகையில் செய்கின்றனர். தமிழகத்தில் எவ்வளவுக்கெவ்வளவு இனவுணர்ச்சி வளருகிறதோ அவ்வளவுக் கவ்வளவு முதலாளித்துவ எதிர்ப்புணர்ச்சியும் வலுத்து வரும் என்பதில் நமக்கு நம்பிக்கை உண்டு. இன உணர்ச்சி வேறு, வர்க்க உணர்ச்சி வேறு அல்ல. கம்யூனிஸ்டுகள் இனவுணர்ச்சியை கம்யூனிஸ்டு வண்டிக்குப் பின்பாரமாக்காமல் முன்னணியில் வைத்துப் பார்ப்பார்களே யானால் இதை நன்கு புரிந்துகொள்ளலாம்.

ஆந்திர மாகாணம் பிரிந்த பிறகும் சென்னையில் ஆந்திரர்களுக்கு அவர்கள் விரும்பும் காலம்வரையில் தலைநகராகக் கருத இடமிருக்க வேண்டுமென்று கூட்டறிக்கையில் குறிப்பிட்டிருந்தனர். அதை நாம் கண்டித்தோம். அதற்கு 'ஜனசக்தி' பதில் கூறுகிறது.

"ஆந்திர அரசாங்கம் நமது விருந்தாளியாக இருந்து கொண்டு ஆந்திர தேச நிர்வாகத்தைக் கவனிக்கும். அவர்களுடைய தலைநகர் தயாரானதும் போய் விடுவார்கள்"

என்கின்றனர். யார்? தமிழகக் கம்யூனிஸ்டுகள். இதனால் 'தமிழருக்குக் கேடு வரும்' என்று சொல்வது பூச்சாண்டியாம்!

உண்மையில் நாம் கூறியது பொய் என்பதற்கு அறிவால், அரசியல் ஞானத்தால், மார்க்ஸீய தத்துவத்தால் பதில் கூறாமல் இது 'பூச்சாண்டி' என்று புறக்கணிப்பது சிறுபிள்ளைத்தனம். உண்மையில், கம்யூனிஸ்டுகள் கூறுவது போன்று விருந்தாளிகளாக இருந்து, குறிப்பிட்ட காலத்தில் ஆந்திர அரசு சென்னை நகரைவிட்டு வெளியேறிவிடுமென்று யார் உத்திரவாதம் தருவது? கம்யூனிஸ்டுகள் ஆந்திர நாட்டை ஆளுவது நாளையே என்றால் நாம் ஆறுதல் கொள்ளலாம். இன்று ஆந்திராவை ஆளுவது, நாளை ஆளவிருப்பது 'மதராஸ் மனதே' என்று கூக்குரலிடும் கூட்டமேஒழிய கம்யூனிஸ்டுகள் அல்ல. விருந்தோம்பும் பண்பாட்டை 'மாஸ்கோ' நண்பர்கள் தமிழருக்குக் கற்றுத்தரவேண்டியதில்லை. அது தமிழ் இனத்தின் இரத்தத்தில் படிந்தது. ஆனால், விருந்தாளியாக வந்தவன் வீட்டைப் பறிக்க முயன்றதுதான் தமிழரின் அனுபவம். இதைத் தெரிந்துகொள்ளவிரும்பினால் மீண்டும் கூறுகிறோம். தமிழ்இன உணர்ச்சியுடையார் எழுதிய ஏடுகளைப் படியுங்கள் என்று.

தமிழ் நாட்டுக்கம்யூனிஸ்டுகளும், ஆந்திர நாட்டு கம்யூனிஸ்டுகளும் ஒன்றுசேர்ந்து அறிக்கைவிட முடிந்த அற்புதத்தைப்பற்றி 'ஜனசக்தி' ஆனந்தப்படுகிறது. ஆந்திரர்—தமிழர் ஒற்றுமைக்கு அதை அடிப்படையாகக் காட்டுகிறது. சித்தூரைப் பறிகொடுத்து, செங்கல்பட்டு, சேலம், வடஆற்காடு ஆகிய ஜில்லாக்களைச் சிதைத்து அவற்றின் கிராமங்களை இழந்து, சென்னை நகரில் ஆந்திர அரசு இருந்துவர ஆதரவு காட்டி, அரசாங்கத்தின் சொத்தை நியாயமான

வரையில் அல்லாமல், கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று வக்காலத்துப்பேசி உறவுகொள்வதென்றால், ஆந்திரமென்ன; உலகத்திலுள்ள அத்தனைக் கொள்ளைக் குணம் படைத்த பேராசைக்காரர்களுடனும் உறவு கொண்டுவிடலாம்.

பொதுவாகக் கம்யூனிஸ்டு தோழர்களுக்கு ஒன்று கூறுகிறோம். தமிழரசுக் கழகத்தினிடம் அரசியல் துறையில் கருத்து வேறுபாடு இருந்தால், அதை வெளிப்படையாக எடுத்துக் கூறுங்கள். அதை விட்டு, ஐக்கிய முன்னணி என்று பேசுவதும், அதே நேரத்தில் கழகத்தை அழிக்கச் சதிசெய்வதும் நேர்மையல்ல.

வடக்கெல்லை கேட்பது தவறென்றால், அதைத் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளே ஆதாரத்துடன் வழக்காடுவதில் ஆட்சேபனையில்லை. ஆனால், 'குமரிமுதல் வேங்கடம் வரையில் தமிழ்நாடு' என்று கடந்த ஓராண்டாக நான் கூறியபோது, கூட்டங்களில் தீர்மானித்தபோது, கூட இருந்து உறவாடி, தீர்மானங்களை ஆட்சேபித்துப் பேசாமல் ஆதரவும் காட்டிவிட்டு, இன்று ஆந்திர கம்யூனிஸ்டுகள் வற்புறுத்தலுக்கஞ்சி நம்மீது வசைமாரி பொழிவது—நம்மை வலுச் சண்டைக்கு இழுப்பது அறிவுடைமையல்ல. திருப்பதி தமிழ் நாட்டின் வடகெல்லை என்பதை தமிழகக் கம்யூனிஸ்டுகள் இத்தனை நாளும் ஆமோதித்து வந்தார்கள் என்பதற்கு எத்தனையோ ஆதாரங்கள் நம்மிடம் உள்ளன.

தொழிலாளியின் குரல்

[அரசு]

●

அன்னியன் உணவை அபகரித் துண்பது
ஆண்மையோ - இது - கேண்மையோ,
தன்னில் எளியரை தரையிற் றிணிப்பது
தருமமோ - உயர் - கருமமோ ?

நெற்றி வியர்த்திடும் ஏழையின் பட்டினி
நீதமோ - இது - வேதமோ ?
சற்றும் உணராது ஐம்பம டிப்பது
சட்டமோ - கண்ட - பட்டமோ ?

காட்டைத் திருத்தியே நாட்டைத் தருப்வன்
கதறவோ - மனம் - பதறதோ,
வேட்டைக் குழைத்திடும் நாயினைப் போலவே
வாழவோ - தினம் - தாழவோ ?

அல்லும் பகலாக அங்கங் களைத்தவன்
அயரவோ - நெஞ்சு - துயரவோ,
நெல்லுங் கரும்புங் கனியுந் தருபவன்
நோகவோ - மண்ணில் - சாகவோ ?

தங்கமும் வெள்ளியும் தேடிக் கொழிப்பவன்
தயங்கவோ - தினம் - மயங்கவோ ?
எங்கும் நிறைந்த பரம்பொரு ளும், இதை
ஏற்குமோ - துயர் - நீக்குமோ ?

மானமிழந்து வாழா மன்னன்

சோக்கதாசன்

கழுமலப் போர்; சேர சோழப் படைகள் எதிர்த்துப் போராடின. தேர்கள் அநேகம் நொறுங்கின. பரிகள், யானைகள் பல்லாயிரம் மாண்டன. கையறுபட்டு காலறுபட்டு வீழ்ந்தனர் பலர். தலையற்றக் கவந்தங்கள் கூத்தாடின. மலைபோல் குவிந்திருந்த பிணக்குவியலிலிருந்து குருதி வெள்ளமெனப் பெருக்கெடுத்தோடியது.

போரில் வெற்றிமாது சோழன் செங்கணானுக்கு மாலையிட்டாள். அவனை யெதிர்த்த சேரமான் கணைக்காலிரும்பொறையும், புலவர் பொய்கையாரும் சிறைப்பட்டனர்.

* * *

அரசவையில், சோழன் செங்கணான் அரியணைமீது வெற்றிச் செருக்குடன் வீற்றிருந்தான். அரசன் கட்டளைப்படி பொய்கையார் அவையின் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். சோழன் அவரைப் பார்த்து ஏளனமாகச் சிரித்து, "பொய்கையாடாப் பொய்கையாரே! அன்று நான் தமிழ் கற்க விரும்பியபோது என்னை அதற்குத் தகுதியற்றவனென்று ஏசினீர். இன்று நான் விரும்பியவாறெல்லாம் உம்மை ஆட்ட வல்லேன்" என்றான்.

அரசரின் வார்த்தைகள் கூரிய அம்புகளைப்போல் புலவர் மனதிற் பாய்ந்தன. அதைச் சமாளித்துக்கொண்டு, "நீ என்னைச் சிறைப்படுத்திய தெங்ஙனம்?" என்று எடுப்பாகக் கேட்டார்.

சோழன் கடகடவென்று நகைத்து, "புலவீர், உமக்குப் பைத்தியம் தலைக்கேறி விட்டதோ? என்முன்னால் கைதியாய் நிற்பதை மறந்தீரோ?" என்றான்.

புலவர் அஞ்சாது, "புல்லறிவாள! நீயோ எனக்கு மாணவனாகும் தகுதியுடையவன். நீ என் உயிரைச் சிறைப்படுத்தினையோ? இல்லை. உடலைத்தானே சிறைப்படுத்தினை. உயிரைச் சிறைப்படுத்த உன்னாற் கூடுமோ?" என்றார்.

அரசனுக்குக் கோபம் பொங்கியெழுந்தது. "இவரைச் சிறைக் கோட்டத்திலடையுங்கள்; உணவு, தண்ணீர், படுக்கை எதுவும் கொடாதீர்கள்" என்று காவலர்களுக்கு உத்தரவிட்டான்.

* * *

சிறைக்கோட்டம். சேரமன்னன், கணைக்காலிரும் பொறை கூண்டிலடைபட்ட சிங்கம்போல் காணப்பட்டான். சிறைப்பட்டது முதல் அவன் உணவே உட்கொள்ளவில்லை. புலி பசித்தாலும் புல்லைத்தின்னுமா? கைதியேயாயினும் அவன் அரசனன்றோ! உணவை முற்றும் துறந்த அவனுக்குத் தாகமேற்பட்டது. எவ்வளவு முயன்றும் தாகத்தை யடக்க முடியாமற்போகவே காவலாளனை நோக்கி, "ஏ காவலாள, குடிக்க நீர் கொஞ்சம் கொண்டுவா" என்று ஏவினான்.

"அடா! அதிகாரத்தைப் பாரடா இவனுக்கு!" என்று ஏளனமாகச் சிரித்தான் காவலன். சிறிது நேரம் தாமதித்து, "இந்தா, ஐயா, தண்ணீர்" என்று இடது கையால் ஒரு தகரக் குவளையில் தண்ணீரை நீட்டினான்.

சேரமான் பேசவில்லை.

"என்ன, வாயைத் திறந்தால் முத்து உதிர்ந்து விடுமோ? என்ன, ஐயா, பேசமாட்டேங்கறே. தண்ணி வேண்டாட்டா, என்னை ஏன் இப்படி அலைக்கடிக்கணும்?.........சரி; குடிச்சாக் குடி, குடிக்காட்டா கொட்டிக் கவிழ்" என்று குவளை நீரைக் கீழே வைத்து சென்று விட்டான்.

சேரமான் தண்ணீரைத் தொடவில்லை. "போர்க்களத்திலே மடிந்து மானத்தைக் காப்பாற்ருத நான் மானமிழந்த பின்னும் வாழ்வதோ" என்று தரையிற் சாய்ந்தான்.

* * *

நள்ளிரவு; செங்கணுன், பொய்கையார் சிறையிருக்கும் அறைக்கருகில் மறைவாக நின்று அங்கு நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தான். புலவர் முகத்தில் கலக்கமேயில்லை: அன்றலர்ந்த தாமரை மலர் போல் அவர் முகம் ஒளி வீசியது. அவர் புவிமாதை நோக்கி, "மானிலத் தாயே! இன்றே நான் பிறந்ததற்குரிய பேறு பெற்றேன். இதுகாறும் உன்னைப் பிரிந்து கட்டிற் படுக்கையில் படுத்திருந்தேன். இன்ருே, உன்றன் அருமைத் திருமடியில் படுத்துறங்கும் பேறு பெற்றேன்." என்று தமக்குத்தாமே சொல்லிக் கொண்டிருந்தார். இவ்வார்த்தைகளைக் கேட்ட அரசன் திகைப்படைந்தான். அவன் மனது தான் செய்த தவறை நினைந்து வருந்தியது. அவர் காலில் விழுந்து, "புலவர் பெரும, உம்மையும் உமது மாணுக்கணுகிய சேரமானையும் சிறை செய்து அவமதித்தேன். என்னை மன்னித் தருள்க" என்று வணங்கினுன்.

* * *

மண்ணிற் புரண்டு கிடந்த சேரர் பெருமானின் உடலைக் கண்டார் புலவர். அவர் மனம் பொருமிற்று. "சேரர் வேந்தே! மலர் மெத்தையில் படுக்க வேண்டிய உன் மேனி புழுதியிலா புரள்வது?" என்று ஏங்கி அவன் மார்பின் மேல் விழுந்து புரண்டு அழுதார். அவ்வேளையில், சேரமானின் அருகில் ஓர் ஏடு கிடக்கக்கண்டு அதைக் கையிலெடுத்துப் படித்தார்:—

"குழவி யிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப் படுஞமலியி னிடற்படுத் திரீஇய

கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ இவ்வுலகத் தானே !" (புறம்)

புலவர் பொய்கையாரின் கையிலிருந்த ஏடு கீழே விழுந்தது. "மானமிழந்து வாழா மன்னவா ! இதோ யானும் உன்னிடம் வருகிறேன்" என்று மண்ணிற் சாய்ந்தார். அடுத்த கணம் அவருடைய ஆருயிர், சேரமான் கணைக்காலிரும் பொறையைத் தேடிச் சென்றது.

* * *

செங்கணான் மனம் கவலையிலாழ்ந்தது; அவன் இடது கண் துடித்தது: துயரமே உருவெடுத்தாற்போல் வீற்றிருந்தான். அவ்வேளை, "அரசே ! அரசே !!" என்று பதட்டத்துடன் கூவிக்கொண்டே ஓடிவந்தான் சிறைக் காவலாள்.

"என்ன நடந்தது ?" என்றான் மன்னவன்.

"சேரமான் பட்டினியால் இறந்து விட்டார்" என்று காவலாள் கூறினான்.

"சேரமான் இறந்தானா ? சிறைக்கோட்டத்திலா ?"

"ஆம்; புலவரும்........."

"புலவருக் கென்ன ?"

"அவரும் மாண்டார்."

இடிவிழுந்தது போலிருந்தது சோழனுக்கு.

நெருக்கம்

—போ. குருசாமி

கல்லூரியிலிருந்து களைத்துவந்த பேராசிரியர் கமலநாதனுக்கு ஒரே கோபம். "வா என்று கேட்க நாதியுண்டா இந்த வீட்டிலே? என்றைக்குத்தான் இந்த வீட்டிலே விடிந்து தொலையுமோ, தெரியவில்லையே!..." என்று சற்று உரக்கப் பேசிக்கொண்டு கோட்டைக் கழற்றி ஒரு மூலையில் கிடந்த நாற்காலி மீது எறிந்தார் ஒரு சாய்வு நாற்காலியை இழுத்துப்போட்டு அதிலே உட்கார்ந்து, "உஸ்ஸ்...அப்பாடா! எல்லாம் நம் தலைவிதி! யாரைப்போய் நொந்து என்ன பண்ண?" என்று சொல்லிக்கொண்டே பூட்சைக் கழற்றி இன்னொரு மூலையில் எறிந்தார்.

வேலைக்காரன் காப்பிகொண்டு வந்தான். அவனை எரித்து விடுவதுபோல் பார்த்தார். "ஏண்டா, சனியனே! காப்பி, நீ கொண்டுவராதே, கொண்டுவராதே என்று எத்தனை தடவை'டா சொல்லித் தொலைவது? உன் மூஞ்சியும் நீயும்! போடா...போ..."

"அம்மா...வந்து...உங்ககிட்ட......

"என்னடா, வந்து...போயி...அம்மாவுக்கு என்னடா வந்துவிட்டது இப்போ? ஊரிலே ஒன்றும் காலரா கீலரா ஒன்றுமில்லையே"...

"இல்லிங்க அம்மா லேடீஸ் கிளப்புக்குப் போறதா உங்க கிட்டே..."

"துரைசாணியம்மா அங்கே போவதாகச் சொல்லச் சொன்னார்களா...அவர்கள் அங்கே போகவே, தாங்கள் காப்பி போட்டீர்களாக்கும்... உங்களைச் சொல்லி என்னடா பண்ண? காப்பியை மேசைமேலே வைத்துவிட்டு எங்கேயாவது போய்த் தொலை..."

கமலநாதன் எழுந்து தம் வீட்டுத் தோட்டப்பக்கமாக இருந்த ஜன்னல் அருகில் போய் நின்றார். ஜன்னலில் கிடந்த சீப்பை அவர் கரம் எடுத்தது. வலக்கையில் இருந்த சீப்பின் பற்களை இடக் கரத்தின் கட்டை விரலால் நெருடினார். அவர் இவ்வுலகத்து நினைவிலே இல்லை...எங்கோ நெடுந்தொலைவில்—எப்போதோ நிகழ்ந்த ஒரு பழங்காலத்தில்—அவர் மனம் ஈடுபட்டதை அச்செயல் காட்டிற்று. 'ட்ர்ர்...ட்ர்ர்' என்று மீட்டப்பெற்ற இந்தச் சீப்பின் சுதியிலே இழைந்தது அவருடைய பெருமூச்சு. ஏதோ எண்ணத்தால் கவரப்பட்டவர் போலச் சீப்புப் பற்களின் மீது தம் விரல் இயங்குவதைக் குனிந்து பார்த்தார். விரலோடு கண் ஒன்றிற்றே தவிர, கருத்து அங்கே இல்லை. 'ட்ர்ர்...ட்ர்ர்' என்ற அந்தச் சுதிக்கேற்ற இதய ஒலியை—கனவுப் பாடலை—அவருடைய அறிவு எழுப்பி விட்டது. நினைவு அலைகளிலே தோய்ந்து—அந்த அலைகளின் எழுச்சி தாழ்ச்சிகளிலே மிதந்து மிதந்து கமலநாதன் எங்கேயோ போய்க்கொண்டிருந்தார். கட்டைவிரல் சீப்பின் பற்களை நெருடிக்கொண்டேயிருந்தது. கமலநாதனோ கட்டை விரல் எழுப்பிய சுருதியோடு இழைந்து—இதய இசையோடு கலந்து எங்கேயோ—...

* * *

"என்ன கமலநாதன்! ஆழ்ந்த சிந்தனையோ? தேர்வு வருகிறதே என்ற நினைவா?"

"ம்ம்......என்ன?"

"என்னப்பா! நீயே இப்படித் தேர்வை நினைத்து உருகினால் நாங்களெல்லாம் என்ன ஆவது?..."

'அஅ!" என்ன கேட்டாய்? தேர்வா? அதெல்லாம் ஒன்றுமில்லையப்பா?

"பின்னே என்னவாம்?..."

"சஞ்சீவி! 'பாரதி அறுபத்தாறு' படித்திருக்கிறாயா?.."

"அதற்கென்ன வந்தது? தேர்வுக்கு அதுவா வேண்டும்? நீ படிக்கிற தத்துவத் தேர்வுக்கும் பாரதி அறுபத்தாறுக்கும் என்னப்பா தொடர்பு?"

"இல்லை, படித்திருக்கிறாயா என்று கேட்டேன், வேறு ஒன்றுமில்லை...வந்து..."

"ஏன், என்னப்பா? என்ன சமாச்சாரம்? என்னவோ மாதிரி பேசுகிறாயே! ஏதாவது இருந்தால் என்னிடம் சொல்லேன்...என்னிடம் கூடவா..."

"சஞ்சீவி! உன்னிடம் சொல்லக்கூடாததோ, மறைக்க வேண்டியதோ ஒன்றுமில்லை. என்ன அருமையான பாடல்கள் தெரியுமா?—உலகத்தைச் சரியானபடி உணர்ந்து பாடினவன் பாரதி. அதிலும் இன்றைய தமிழ்நாட்டைச் சாறுப் பிழிந்துதான் வைத்திருக்கிறான். என்னமாய்ப் பாடுகிறான்... நீதான் பாரேன்..."

நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாமென்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்
பர்டைகட்டி அதைக்கொல்ல வழிசெய் கின்றார்
பாரினிலே காதலெனும் பயிரைமாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள்செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின்றாரே.

என்ன....சஞ்சீவி! பாட்டு எப்படியிருக்கிறது? இந்தத்தமிழ் நாடு உருப்படுமா?.........

"கமலநாதன்! உன் விஷயம் என்னவோ எனக்கொன்றும் புரியவில்லை. அன்றைக்கு உன் டைரியிலே "பூத்த சோதி

வதனம் திரும்புமேல் புலனழிந்தொரு புத்துயிர் எய்துவேன்" என்று எழுதிவைத்திருந்தாய். இன்றைக்கு என்னமோ மனத்தையே பறக்க விட்டு விட்டு...........ம் ம்.....என்னப்பா, உன் போக்கு ஒன்றுமே புரியவில்லையே?........."

"சஞ்சீவி! என்மனம் சரியாயில்லை. ஊருக்கே போய் விடலாமா என்றுகூட எண்ணுகிறேன். பரீட்சையாவது ஒன்றாவது! மனிதனுக்கு நிம்மதியில்லையென்றால் இதெல்லாம்... வீண்தானே!..."

"இதோபார், கமலநாதன்! என்னவென்று விஷயத்தைச் சொல்லாமல் புதிராகப்பேசிக்கொண்டே போனால் அர்த்தமென்ன?..."

"என்னால் ஒன்றும் சொல்லமுடியவில்லை, சஞ்சீவி. மனம் சரியாயில்லை. எல்லாம் நம்முடைய ஆசிரியரைக் கேள், சொல்லுவார்.

இந்த உரையாடல் நடந்து எவ்வளவோகாலம் ஆகிவிட்டது. இன்று ஏனோ அது கமலநாதனுடைய நினைவிலே எழுந்தது. சஞ்சீவியும் தாமும் தத்துவப் பட்டம் பெறப் படித்த காலம்—தேர்வு—கஷ்டப்பட்டுப் படித்தது—இதெல்லாம் பின்னணியாக அமைய அந்த உரையாடல் மட்டுமே மிகவும் முன்னின்று அவர் நினைவுத் திரையை ஆதிக்கம் செலுத்திற்று.—ஓங்கி நின்று நினைவில் எழுந்த அந்த உரையாடல் கமலநாதனுடைய வாழ்க்கையில் உண்மையிலேயே மிகவும் முக்கியமானதுதான்.

*　　　　*　　　　*

சஞ்சீவிக்கு கமலநாதனுடைய போக்கு ஒன்றும் புரியவில்லை. பேயடித்த மாதிரியாக வெறிச்சென்ற பார்வையோடு—எதிலும் ஊன்றிய கவனமில்லாமல்—வெறும் இயந்திரம் போல் இயங்கிவந்த போக்கு மிகவும் வருத்தத்தை விளைத்தது.

தன்னுடைய தத்துவப் பேராசிரியர் திரு. வரதப்பரைச் சென்று கண்டான். "காணாத கனவுகாணுகிறான் உன் நண்பன். கவிதையுலகில் கண்ட காதலை கல்லாய், மண்ணாய்க் கிடக்கிற இந்த உலகத்திலும் காண நினைக்கிறான். காணமுடியாது என்று உணரநேர்ந்தபோது கவலைப்படுகிறான். உலகம் வேறு; உணர்வு வேறு." —இது அந்தப் பேராசிரியரிடமிருந்து சஞ்சீவிக்குக்கிடைத்த விளக்கம்.

சஞ்சீவிக்கு ஒரே கோபம். "இதென்ன, சார், புதுப்பாடமாய் இருக்கிறதே! உணர்வால்தான் இந்த உலகமே இயங்குகிறது என்று சொல்லிக்கொடுத்த பாடம் கல்லூரிக்கு மட்டுந்தானா? இங்கே இப்படிச் சொல்லுகிறீர்களே—! உலகம் வேறு—உணர்வு வேறு...! இதென்ன, சார், பெருமயக்கமாக அல்லவா இருக்கிறது. ..."

"சஞ்சீவி! இதிலே மயக்கம் ஒன்றும் இல்லை. இது பெரிய புதிர். மனித அறிவுக்கு எட்டாத புதிர் என்று சொல்லமுடியாது. ஆயினும் புதிர்தான். சிக்கலைத் தீர்த்துவிடலாம்; ஆனால், இன்று, இந்தநாட்டில் இல்லை. இனி, எப்போதோ—என்றோ—உதயமாகப்போகிற—புதிய தமிழகத்திலே வேண்டுமானால் இந்தச் சிக்கலும் புதிரும் இல்லாமலிருக்கலாம். ஆனால்—இன்று—இருள் சூழ்ந்த இந்தத் தமிழ்நாட்டில்—உலகம் வேறு; உணர்வு வேறுதான். காதல் என்பது காவியச் சரக்கு. இந்த நிலையில் உன் நண்பன் காணும் கனவுவெறும் கோட்டை—ஆகாயக் கோட்டை. தமிழ்நாட்டு நிலை தெரியாமல் அவன் அலமருகிறான். பாரதி பாட்டைக் கேட்டதில்லையா? "நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்......" பாட்டுத் தெரியுமல்லவா? காதல் என்பது ஆறுவது பாதகம் என்று எண்ணுகிறது இன்றைய தமிழர் மனம். கலப்பு மணம் என்பது கழுவாயில்லாத பெரும்பாவம் என்றெண்ணுவது இன்றைய தமிழ்த்தாயர் இயல்பு. இந்நிலையில் கமலநாதன் மனக்கவலைப்பட்டால் நாம் என்ன செய்யமுடியும்... ?"

"சார், நீங்கள் சொல்வதுபோலவே அவனும் பாரதி பாட்டைப் புலம்பிக்கொண்டுதான் இருக்கிறான். ஆனால்..."

"அதே பாட்டைத்தானா சொல்லுகிறான்?"

"ஆம்"

"பின்னே கவலை ஒன்றுமில்லை. அந்தப் பாட்டு அவன் உள்ளத்தில் இடம்பெற்றால் போதும். நாளடைவில் அறிவு தெளியும். நாட்டு நிலைதான் தன் மனத்தை மாய்த்ததற்குக் காரணம் என்று தெளிவான்..."

"ஆனால், நான் சொல்லுவதை நீங்கள் முழுவதும் கேட்கவில்லையே! மனத்தெளிவை யூட்டும் என்று நீங்கள் சொல்லுஞ் பாட்டே அவன் மனத்தை கலக்குகிறது; மூளையைக் கலக்குகிறது. அவன் பேய் கொண்டவன் போல—பித்தேறியவன் போல—போல் என்ன—பித்தேறியவனாகவே—இருக்கிறான், சார். இதற்கு ஏதாவது வழிதேடித்தான் ஆகவேண்டும். இல்லையென்றால் என்ன ஆகுமென்று சொல்லமுடியாது..."

* * *

என்ன ஆகுமென்று முன்கூட்டித் தெரிந்துவிட்டால் மனிதனே தெய்வமாகிவிடுகிறான். அது தெரிந்துவிட்டால் வாழ்க்கையிலே வெறி இருக்கமுடியாது. இன்பத்தை எதிர்நோக்கும் மனிதனுக்கு எதிர்காலம் தெரியக்கூடாது. தெரிந்தால் இன்பம் என்பதற்கு ஒன்றும் தனியான சிறப்பு இருக்கமுடியாது. கமலநாதன், சஞ்சீவி இவர்கள் யாவரும் சாதாரண மனிதர்கள்; எதிர்காலம் தெரியாத மனிதர்கள். எனவே, இன்பம் வந்தபோது நன்றாய்த் திளைத்து மகிழ்ந்தார்கள். துன்பத்துள் துன்பம் உழன்ற கமலநாதனுக்குத் திருமணம் இன்பத்துள் இன்பமாய் அமைந்தது; கண்டு மகிழ்ந்தான் சஞ்சீவி. அன்று, பேராசிரியரோடு பேசிய காலத்திலே கமலநாதன் வாழ்க்கையிலே இத்தகைய மகிழ்ச்சியைக் காணமுடி

யும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆகையால்தான் ''என்ன ஆகுமென்று தெரியாது'' என்று சொன்னான்.

பேராசிரியர் வரதப்பனுக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் சஞ்சீவியின் மகிழ்ச்சி வேறு; அவர் மகிழ்ச்சி வேறு. சஞ்சீவியின் மகிழ்ச்சி வெறும் மகிழ்ச்சி—நண்பன் இன்பத்தால் எதிரொளி செய்யும் மகிழ்ச்சி. கதிரவன் ஒளியால் ஒளிரும் மதிபோன்றது அவன் பெற்ற மகிழ்ச்சி. ஆனால், போராசிரியர் மகிழ்ச்சி அறிவறிந்த மகிழ்ச்சி, கமலநாதனின் கலங்கிய நிலை—பின் தெளிவு—நாளடைவில் வந்துற்ற மண மகிழ்வு—இப்படியாகக் கமலநாதனுடைய வாழ்விலே மனித இயல்பு, தமிழின நிலை இவற்றை ஆய்ந்து தெளிந்து அத்தெளிவால் பிறந்த மகிழ்ச்சிதான் பேராசிரியரின் மகிழ்ச்சி.

இனிமேலாவது கமலநாதன் மகிழ்ச்சியோடு இருப்பான் என்று சஞ்சீவி ஐயமில்லாமல் மகிழ்ந்தான். ''கமலநாதா, கமலினி வந்தாயிற்று; இனி கலக்கமும் கவலையும் இல்லை'' என்று தன் மகிழ்ச்சியைச் சொல்லியும் காட்டினான்.

—''விழைவு என்பது இயற்கையுணர்வு; ஆனால் மிக மெல்லிது; எளிதிலே அழிந்துவிடக் கூடியது. அந்த உணர்வை அடிப்படையாகவைத்து ஒரு பெரிய மாளிகை எழுப்பவேண்டும். இந்தக் காரியம் மிகவும் கஷ்டமானது. 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்பதை மறவாதே. இது தான் இருவரிடையே உள்ள விழைவைக் காதலாக மாற்றக் கூடிய ஆற்றல் வாய்ந்த மந்திரம். விழைவு வெறும் வித்து; காதல் பெரு மரம். வித்திலிருந்து மரம் தோன்றி வளர்ந்து விரியவேண்டும். இடையே முறிப்புகளும் பல நேரிடலாம். எல்லாக் காலத்திலும் வழிகாட்டும் மந்திரம் இதுதான்: ஒருவர் பொறை இருவர் நட்பு''—இது பேராசிரியர் வரதப்பரின் அறிவுரை.

கமலநாதனுக்கு வாய்த்த மனைவி நல்லவள்தான். அவருக்குப் பிடித்தமானவள்தான். அவரே தேர்ந்தெடுத்தார் என்று

சொல்லமுடியாது; என்றாலும் தாம் அவளைப் பெற்றதிலே பெருமகிழ்ச்சிதான். ஆடம்பரமற்ற குடும்பத்திலே—ஆரவார மற்ற வகையிலே வளர்ந்து வந்த அங்கயற்கண்ணி தன் வாழ்க்கைக்கு ஏற்ற துணையாக இருப்பாள் என்று அவர் எண்ணினார். 'மனைவி படித்தவள்' என்ற நினைவும் கமல நாதனுக்கு மகிழ்ச்சியை ஊட்டிற்று.

கமலநாதன் இன்பப் பயணம் தொடங்கினார். அமைதி யாய்த் தொடங்கினார். அமைதியாய் வந்த அங்கயற்கண்ணி அவருக்குத் தக்கதுணையாய் அமைந்தாள். ஆனால் அதெல் லாம் சில ஆண்டுகளே. அதன் பிறகு, கமலநாதன் விரும்பிய அமைதி வீட்டில் இல்லை. ஆடம்பர வாழ்வையே அங்கயற் கண்ணி விரும்புகிறாள் என்பதைக் கண்டார்; கலங்கினார். முதலில் இன்பங் கண்டவர் துன்பத்தையும் அனுபவித்தார். "வெளியார் மதிக்க வேண்டாமா" என்ற சாக்கிலே வேண் டாத ஆடம்பரங்களிலே தன் மனத்தைச் செலுத்தினாள் அங்கயற்கண்ணி. அவருடைய தத்துவ மனம் ஆராயத் தொடங்கிற்று. "பெற்றோர் உரிமை தராமல்—கட்டுப்பாடு செய்து வளர்த்திருக்கிறார்கள். உரிமையின்றி நசுங்கிக் கிடந்த அடிமை மனம் இங்கே ஆடுகிறது" என்று அவர் மனம் சொல் லிற்று. காரணம் கண்டதால்மட்டுமே அமைதி கிட்டவில்லை. தன் நிலையைச் சஞ்சீவிக்கு அறிவித்தார். அவன் வருந்தினான். நண்பர் மகிழ்ந்தால் மகிழ்கிறான்; வருந்தினால் வருந்துகிறான். இவ்வளவுதான் சஞ்சீவியால் முடிந்தது. கமலநாதனுக்கு ஒரே வெறுப்பு; எதைப் பார்த்தாலும் சலிப்பு. இந்நிலையில் தான் மேலே கண்ட காப்பிக் கதை நடந்தது.

காப்பி ஆறி அலர்ந்து கிடந்தது—யார் குடிக்க? எவர் எடுக்க?

சஞ்சீவியின் நினைவுவெழுந்தது. அவனும், தானும் பேசிய உரையாடல் நினைவிலெழுந்தது. எல்லாம் சிப்பின் 'ட்ர்ர்ர்' ஒலியிலேதான். பாரதி பாடல் இன்னும் அவர் நெஞ்சைச்

கலக்கிற்று. "நான் நினைத்தபடி அவளைத் திருமணம் புரிந்திருந்தால்..." என்ற எண்ணத்துக்கு வடிவம் கொடுக்க முயன்று ஒரு பெருமூச்சுப் பிறந்தது.

"நன்ருயிருக்கிறது..." என்ற குரல் கேட்டுக் கமலநாதன் தம் நினைவு பெற்ருர்.

அங்கயற்கண்ணி வந்துவிட்டாள். "ஆண்பிள்ளைகள் காரியமே இப்படித்தான். ஆமாம், காப்பி கிடந்து இப்படி ஆறி அலர்ந்து போகிறதே! இதைக் குடிக்காமல் அப்படி என்ன குடிமுழுகிப் போகிற யோசனை, தெரியலையே! உங்கள் 'வாத்தியார்' காகிதம் எழுதியிருக்கிருர், பார்த்தீர்களோ?"

காகிதம்...! ஆசிரியர் காகிதம்! அங்கயற்கண்ணி பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த கமலநாதனுக்கு அப்போது தான் செவிப்புலன் வேலை செய்யலாயிற்ற.

"காகிதமா? எங்கே? பார்க்கலையே!"

அவள் கடிதத்தைக் கொடுத்தாள்; கமலநாதன் பிரித்துப் பார்த்தார் "மறக்கவேண்டாம். ஒருவர் பொறை இருவர் நட்பு—இதுதான் மந்திரம். நெருங்கிப் பழகுவதால் நெருக்கடி ஏற்படும். அப்போது மந்திரத்தை மறக்கவேண்டாம்"—இவ்வளவுதான் கடிதம்.

—

முரசு

(கா. மா. காளிதாசன்)

அகில மக்கள் சமூகமுற்றும்
 அறிய முரசு கொட்டடா!
ஆண்கள் பெண்கள் சாதிபேதம்
 அற்றதென்று கொட்டடா!
மகிபருக்கும் மற்றவர்க்கும்
 வாழ்க்கையில் சமத்துவம்
வாய்த்ததென்று தாயகத்தை
 வாழ்த்தி வாழ்த்திக் கொட்டடா!

தமிழர்நாடு தமிழருக்கே
 சொந்தமென்றும், சென்னையே
தமிழகத்தின் முதன்மை ராச
 தானியென்றும் கொட்டடா!
குமரி தெற்கில் வேங்கடத்தை
 வடபுறத்தில் எல்லையாக
கொண்டதென்றும் மதகளிற்றுக்
 கொம்பொடித்துக் கொட்டடா!

மண்ணுமதிர விண்ணுமதிர
 மாற்றலர் பொருதவர்
மனமுமதிர நினைவுமதிர
 மாறி மாறிக் கொட்டடா!
எண்ணம் முழுதும் இனிது முடிய
 எங்கள் ராச்சியத்தினை
இறைவனின்றிப் பொதுவிலாள்வோம்
 என்று முரசு கொட்டடா!

தமிழர் திருநாள்

தமிழரசுக்கழகச் செயலாளர் திரு. கொ. மோ. ஜனார்த்தனம் கீழ்வருமாறு எழுதுகிறார் :—

தமிழ் மக்களே !

வழக்கம்போல் இவ்வாண்டு தைத்திங்கள் முதல் நாளன்று (14-1-48) பொங்கல் திருவிழா வருகிறது. அந்நாள் தைப்பொங்கல் திருநாளின் பெருமை செப்புந்தரமன்று. தமிழினத்தின் பண்பாட்டுச் சிறப்பை உலகுக்குணர்த்தும் திருநாள்—உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் பெருநாள். இதை மறத்தல்கூடாது.

பண்டை நாளில் தமிழரசைச் சுற்றியே மொழி, பண்பாடு, இசை, இலக்கியம், ஒழுக்கம் ஆகிய எல்லா இயல்புகளும் வளர்ந்தோங்கின. ஆனால், இன்றோ தமிழகத்தில் தனியரசில்லை. தமிழ் நிலம் பல்வேறு துண்டுகளாக சிதறுண்டு கிடக்கிறது. தமிழ் இனத்தார் உரிமை இழந்து ஒடுங்கி வருந்துகின்றனர். இயல், இசை, நாடகம் ஆகிய துறைகளில் தமிழ் மொழி தனக்குரிய சிறப்பை இன்னும் பெற்றுவிடவில்லை. தமிழ் நாட்டின் வளம் தமிழருக்காகாது பிறஇனத்தார் சுரண்டிச் செல்கின்றனர். தமிழ் நாட்டில் பிறந்த மக்கள் தாயகத்தில் பிழைக்க வழியின்றி, பிறநாடு சென்று அல்லல்படுகின்றனர். இந்த சீர்கெட்ட நிலையிலிருந்து விடுபடுவதற்குள்ள ஓரே வழி தமிழ் நாட்டைத் தமிழருக்கே ஆக்கி, அதில் சுதந்திர சோஷலிசக் குடியரசை அமைப்பதேயாகும். எனவே, பொங்கல் திருநாளில் தமிழகத்திலுள்ள எல்லாத்தமிழ் மக்களும் ஒன்றுபட்டு நின்று

இன்பத் தமிழகம் அடைவதற்கான எண்ணங்களை வெளியிடவேண்டும்.

தமிழகமெங்கும் உள்ள தமிழரசுக் கிளைக்கழகங்கள் தைத்திங்கள் முதல் நாளிலிருந்து ஏழுநாட்களை தமிழர் வாரமாகக் கொண்டாடுமாறு வேண்டிக்கொள்கிறேன். அந்த நாட்களில் தமிழர் பண்பு, தமிழரின் அரசியல் கோரிக்கைகள் ஆகியவைகளை மக்களிடையே பரப்பவேண்டும்.

சமய, கட்சி பூசலுக்கான கோஷங்களோ, வழிபாடுகளோ இதில் கலக்கக்கூடாது. 'தமிழ் மொழி பேசித் தமிழகத்தைத் தாயகமாகக் கொள்வோர் எல்லோரும் 'ஓர் இனம்' என்ற உணர்ச்சியில் ஒன்றுபடுவதற்கான முறையில் விழாவைக் கொண்டாடவேண்டும்.

காலையில் தமிழ்க்கொடி ஏற்றுதல், மாலையில் ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தல் ஆகியவை நிகழ்ச்சியில் இடம் பெறவேண்டும்.

தமிழரசுக் கழகம்
கிளைக்கழகத் தோழர்களுக்கு!

தோழர்களே !

தமிழரசுக் கழக விண்ணப்பத் தாள்களை 20-1-48 தேதிக்குள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன். அதற்குள் அங்கத்தினர் பதிவுப் புத்தகம் ஒன்றை ஒவ்வொரு கிளையும் வைத்துக்கொண்டு, அதில் விண்ணப்பத் தாள்களில் உறுப்பினர் கொடுத்துள்ள விவரங்கள் ஒன்றினையும் விடாது பதிவுசெய்து கொண்ட பின்னர், அதை அனுப்பவேண்டுகிறேன்.

மேலும், இதுவரையில் சேர்ந்துள்ள உறுப்பினர் கட்டணத்தொகையில் பாதியை அந்த அந்த கிளைகளின் அன்றாட அலுவல்களுக்கு வைத்துக்கொண்டு, எஞ்சியுள்ள பாதித் தொகையை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

கோ. மோ. ஜனார்த்தனம்

செயலாளர்

தமிழரசுக்(கிளைக்)கழகங்கள்

பொன்னிரை (தஞ்சைமாவட்டம்) :— தலைவர்: திரு. சேவுத் தேவர்; செயலாளர்: சவரி மாசிலாமணி; துணைச்செயலாளர்: சந்தானம்; பொருளாளர்: கணபதிராயர்;

உறுப்பினர்கள்: செல்ல நாராயணசாமி, செல்வத்திக் கண்ணு' அப்பாக் கண்டியர். ரெ. சொக்கலிங்கம், ந. கோவிந்தசாமி, நடராசன்.

மல்ல சமுத்திரம் (சேலம்மாவட்டம்) :— தலைவர்: எம். பி. வெள்ளைய முதலியார், (த. நா. கா. கமிட்டி உறுப்பினர்) துணைத்தலைவர்: ஆர். தருமலிங்கம், செயலாளர்: மெ. வி. சிவானந்தம், துணைச் செயலாளர்: கே. எஸ். மாணிக்கம், பொருட்காப்பாளர்: எம். கே. வடிவேல்,

உறுப்பினர்கள்: கே. ஆர். வைத்திலிங்கம், பி. எஸ். குப்புசாமி டி. கே. கந்தசாமி, ஈ. எஸ். இராமசாமி, எ. முத்துராசர், வி. கே. வேங்கடாசலம்.

திருத்துறைப்பூண்டி: (தஞ்சைமாவட்டம்) :— தலைவர்: திரு. வி. ஆறுமுகம்; துணைத்தலைவர்: இரா. சீனிவாசன்; செயலாளர்: சா. ராமன்; துணைச்செயலாளர்: கா. ராமச்சந்திரன்; பொருட்காப்பாளர், நாக. சுப்பையன்.

உறுப்பினர்கள்: இரா. பட்டு, இரா. கணேசன், ந. சுப்பையன், அ. ராமசாமி, கா. விசுவநாதன், நா. ஆதிகேசவன், சோ. ஷண்முகம், ந. வே. ராமசந்திரன், கோ. சுப்பிரமணியன், இரா. ராமசந்திரன்.

நச்சாந்துபட்டி: (புதுக்கோட்டைத் தனியரசு) :— தலைவர்: திரு. ந. மு. அ மு. அண்ணாமலை; துணைத்தலைவர்: வீர. கிருஷ்ணன்; செயலாளர்: சித. கருப்பையா; துணைச்செயலாளர்; சுப. குமரப்பா; பொருட்காப்பாளர்: பழ. சி. ராம. ராமநாதன்.

உறுப்பினர்: திருவாளர் மு. குமாரசாமி, மு. கிருஷ்ணன், அ. லெ. அடைக்கலவன், மெ. மெய்யப்பன், ந. சுப்பிரமணியம், ராம.

கருப்பையா, சா. சித. சிதம்பரம், பழ. சுப்பையா, முத்து. அண்ணாமலை, பெரி. சுப. ராமசாமி செட்டியார்.

சேலம் மாவட்டக் கழகம்: தலைவர்: கோ.ப. பச்சையப்பன், செயலாளர்: அ. வி. முத்துசாமி, துணைச்செயலாளர்: தி. அர்த்தனாரி.

உறுப்பினர்; மா. சு. சென்னப்பர், ஆ. ரா. முத்துசாமி, நா. சண்முகம், மு. ராமலிங்கம்.

மதிப்புரை

வரப்பெற்றோம்:—

'மாலுமி' (மாத இதழ்):— ஆசிரியர்; டி. பி. ராமசாமி; 'மாலுமி' காரியாலயம், திருப்பூர், விலை அணா எட்டு.

'உத்தம மித்திரன்' (வாரப்பதிப்பு):— ஆசிரியர்; மாயவரம், கே. பி. எம். ஐ. சூர்மா; 246, அங்கப்ப நாய்க்கன் தெரு, சிதம்பரம் நகர் சென்னை. விலை அணா நான்கு.

'பல்லவ நாடு' (மாத வெளியீடு):— ஆசிரியர் வ. செயசந்திரன். இராயபுரம், சென்னை. விலை அணா நான்கு.

இல்லணைச் சுடர் எழுதியவர்:— தமிழாசிரியர் மு. த. வேலாயுதம் கிடைக்குமிடம், 43, மாதர்க்கோவில் வீதி, புதுவை. விலை அணா பன்னிரண்டு.

தமிழகம் இழந்த தளபதி:— எழுதியவர்: என். ஈ. பாலகுரு; கிடைக்குமிடம், அர்ச்சுனன் விலைபம், ஈரோடு. விலை அணா நான்கு

மாதா தேர்வடப் பாமாலை:— எழுதியவர்: பண்டித. எம். எக்ஸ். ரூபின் வர்மா. கிடைக்குமிடம்; அம்புரோஸ்பதி, தூத்துக்குடி.

எல்லோருக்கும் உணவு :— எழுதியவர் ; டாக்டர் ஜி. அதிகாரி ; மொழி பெயர்ப்பு : எம். இஸ்மத் பாஷா, விலை அணா ஐந்து.

பாரதி வழி எழுதியவர்: ப. ஜீவானந்தம். விலை அணா நான்கு.

போட்டித் தொழிற்சங்க காங்கிரஸ் அவசியமா? :— எழுதியவர் : என். எம். ஜோஷி; விலை அணா ஐந்து.

நாட்டைத் துண்டிப்பது சுதந்திரப் பாதையல்ல :— எழுதியவர் : பி. ஸி. ஜோஷி; விலை அணா இரண்டு.

நவகாளி நரகம் :— எழுதியவர் பி. ஸி. ஜோஷி; விலை அணா இரண்டு.

சர்வதேச உணவுத் திருடர்கள் :— எழுதியவர் ஆர். லாபோவ் விலை அணா மூன்று.

திருவாங்கூர் போர்க்களம் :— எழுதியவர் ஆர். எச். நாதன், விலை அணா ஆறு.

மவுண்ட் பாட்டன் தீர்ப்பு :— இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மத்திய கமிட்டியின் அறிக்கை. விலை அணா இரண்டு.

மன்னர்களின் போர்க்கோலம் :— எழுதியவர் : ரமேஷ் ஸின்ஹா விலை அணா இரண்டு.

காவேரி பாயும் நாட்டிலே பஞ்சம் ஏன்? பட்டினி ஏன்? :— இந்திய கம்யூனிஸ்டுக் கட்சித் தமிழ் மாகாணக் கமிட்டி வெளியீடு ; விலை அணா ஆறு.

மேற்கண்ட புத்தகங்களை வெளியிட்டோர்: ஜனசக்தி பிரசுராலயம், 6, டேவிட்ஸன் தெரு. ஜி. டி. சென்னை.

*　　　　*　　　　*

உணவைப்பெருக்க உழவன் திட்டம், நிலச்சுவான்தாரி முறையை ஒழிப்போம் :— மேற்கண்ட இரண்டு புத்தகங்களும் தமிழ் நாடு கிஸான் சபை வெளியீடு. கிடைக்குமிடம் 6. டேவிட்ஸன் தெரு, சென்னை. பிரதி ஒன்றின் விலை அணா மூன்று.

வெளியிட்டோர்: ம. பொ, சிவஞானம் 1-29 இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி சென்னை. அச்சிட்டோர் திரு. கே. இ. நாகலிங்க முதலியார் செங்குந்த மித்திரன் அச்சகம் சென்னை.

பதிவு எண். எம். 4803 "தமிழ் முரசு" 1, ஜனவரி, 1948

தமிழன் குரல்

இன்ப நிலையம்
தியாகராயநகர்
சென்னை.17.

தமிழன்குரல்

தமிழரசுக்கழகத் தலைவர் — 'தமிழ்முரசு' ஆசிரியர் திரு ம.பொ.சிவஞானம் எழுதியது.

"தமிழர் தனி இனமா? தமிழ்நாடு தனிநாடா? தமிழகத்தில் சுதந்திரத் தமிழரசை நிறுவமுடியுமா? அப்படி நிறுவுவது அகில இந்திய ஒற்றுமைக்குப் பொருந்துமா? சுதந்திரத் தமிழரசு சோஷலிசப் பாதையில் சென்று மக்களுக்குச் சுகவாழ்வு தருமா? என்ற பல்வேறு பிரச்னைகளை விளக்கித் தமிழரசுப் போராட்டத்தை ஊக்கிவிட உதவி செய்யும் ஒருநூல் உடனடியாகத் தேவை என்று நான் நெடுநாளாக எண்ணி வந்தேன். அந்த எண்ணத்தின் விளைவுதான் இந்நூல்.

தமிழரசு இயக்கத்தைத் துவக்கிவைத்தவன் கடந்த ஓராண்டாக அதை நடத்திவரும் தமிழரசுக் கழகத்திற்குத் தலைமை தாங்குபவன் என்றமுறையில் எனது அனுபவத்தில் ஏற்பட்ட எண்ணங்களை இந்நூலில் எழுதியுள்ளேன். தமிழரசுக் கழகத்தின் கருத்துக்களைப் புரிந்துகொள்ள தமிழ்மக்களுக்கு இந்நூல் ஓரளவேனும் உதவியாக இருக்குமென்பது எனது நம்பிக்கை," என ம.பொ.சி. தமது முன்னுரையில் கூறுகிறார்.

புதிய தமிழகத்தை — தமிழகத்தில் தனியரசைக் காண விரும்பும் தமிழ் இனத்தவருக்கு இந்நூல் வழிகாட்டி. தமிழன்குரல் தங்களிடமும் இருக்கவேண்டாமா?

என்றுமுங்கள்,
இன்ப நிலையத்தார்.

விலை ரூபாய் இரண்டு.
தபாற் செலவு வேறு

Wrapper Printed at the Sengunthar Mithran Press, Madras 1